உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவத்திருநெறிப் பன்னிரு திருமுறைத் திரட்டு.

இஃது

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித்

தலைமைத் தமிழ்ப்பண்டிதராகவிருந்த

ஸ்ரீ ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளையவர்களால்

சைவவித்தியாசாலைகளினுபயோகத்திற்காகத்திரட்டப்பட்டு,

எம். எஸ். துரையவர்களால்

யாழ்ப்பாணம்

சைவப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிடுவிக்கப்பெற்றது.

௫-ம் பதிப்பு.

பிரமோதூத வருஷம் ஆவணிமீ

விலை சதம் 35.

1930.

841.3104
சேனாஸ்
SL/PR

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

7. 11. 33.

841.3104

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவத் திருநெறிப் பன்னிரு திருமுறைத் திரட்டு.

இஃது

யாழ்ப்பாணத்து நல்லூர்

வித்துவசிரோமணி

ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்

மாணாக்கரும்,

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித்

தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்தவருமாகிய

ஸ்ரீ ஆ. மு. சோமாஸ்கந்தப்பிள்ளையவர்கள்

சைவ வித்தியாசாலைகளி னுபயோகத்திற்காகத் திரட்டியது.

---

எம். எஸ். துரையால்

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.


௫ம் பதிப்பு.

பிரமோதூத௵ ஆவணி௴.

1930.

35710

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

தமிழ்ச் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
12/10/04

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவத் திருநெறிப் பன்னிரு திருமுறைத் திரட்டு.

## க-ம் வகுப்பு.

### தேவாரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

க-ம் திருமுறை. திருப்பிரமபுரம். பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (க)

க-ம் திரு. திருச்சிவபுரம். பண்-வியாழக்குறிஞ்சி.

இன்குரலிசைகெழும்யாழ்முரலத்
தன்கரமருவியசதுரனகர்
பொன்கரைபொருபழங்காவிரியின்
தென்கரைமருவியசிவபுரமே. (உ)

உ-ம் திரு. திருச்சிக்கல். பண்-இந்தளம்.

வானுலாவும்மதிவந்துலாவும்மதின்மாளிகை
தேனுலாவும்மலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனில்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினையாயினநையுமே. (ங)

வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசுநாயனார்.

௪-ம் திரு. திருவதிகைவீரட்டானம். பண்-கொல்லி.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியேன்
ஏற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதுடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௫)

௪-ம் திரு. திருவங்கமாலை. பண்-சாதாரி.

தலையேநீவணங்காய், தலை மாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத், தலையேநீவணங்காய் (௬)

கண்காள்காண்மின்களோ, கடல் நஞ்சுண்டகண்டன்றன்னை
எண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக், கண்காள்காண்மின்களோ ( )

செவிகாள்கேண்மின்களோ, சிவன் எம்மிறைசெம்பவள
எரிபோல்மேனிப்பிரான்றிறமெப்போதுஞ், செவிகாள்கேண்மின்களோ.

மூக்கேநீமுரலாய், முது காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை, மூக்கேநீமுரலாய். (௯)

வாயேவாழ்த்துகண்டாய், மத-யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றனை, வாயேவாழ்த்துகண்டாய். (௧௦)

நெஞ்சேநீநினையாய், நிமிர்-புன்சடைநின்மலனை
மஞ்சாடுமலைமங்கைமணாளனை, நெஞ்சேநீநினையாய். (௧௧)

கைகாள்கூப்பித்தொழீர், கடி மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக், கைகாள்கூப்பித்தொழீர். (௧௨)

ஆக்கையாற்பயனென், அரன் கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ், வாக்கையாற்பயனென். (௧௩)

கால்களாற்பயனென், கறைக்-கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக், கால்களாற்பயனென். (௧௪)

உற்றாராருளரோ, உயிர்-கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக், குற்றாராருளரோ, (௧௫)

இறுமாந்திருப்பன்கொலோ, ஈசன்-பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன்கொலோ( )

தேடிக்கண்டுகொண்டேன், திருமாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே, தேடிக்கண்டுகொண்டேன்.



௪-ம் திரு. திருவாவடுதுறை. நேரிசை.

மாயிருஞாலமெல்லாம்மலரடி வணங்கும்போலும்
பாயிருங்கங்கையாளைப்படர்சடைவைப்பர்போலுங்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தகழுமலவூரர்க்கம்பொன்
ஆயிரங்கொடுப்பர்போலுமாவடுதுறையனாரே. (௧௮)

௪-ம் திரு. திருப்பாதிரிப்புலியூர். திருவிருத்தம்.

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
ஏன்றானிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே. ( )

௫-ம் திரு. கோயில். திருக்குறுந்தொகை.

அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்குமேலுமிப்பூமிசை
என்னம்பாலிக்குமாறுகண்டின்புற
இன்னம்பாலிக்குமோவிப்பிறவியே. (௨௦)

௬-ம் திரு. கோயில். பெரியதிருத்தாண்டகம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானை
அருமறையினகத்தானையணுவையார்க்குந்
தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத்
திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக்
கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக்
கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்ற
பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௨௧)

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்
காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினானை
அற்றார்க்குமலந்தார்க்குமருள்செய்வானை
ஆரூரும்புகுவானையறிந்தோமன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றாருந்தன்னொப்பாரில்லாதானை
வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தப்
பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௨௨)

௬-ம் திரு. திருவாவடுதுறை. திருத்தாண்டகம்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்
செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்நற்சோதிமிக்க
உருவேயென்னுறவேயென்னூனேயூனின்
உள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்
கருமணியேமணியாடுபாவாய்காவாய்
அருவாயவல்வினைநோயடையாவண்ணம்
ஆவடுதண்டுறையுறையுமமரரேறே. (௨௩)

சுந்தரமூர்த்திநாயனார்.

௭-ம் திரு. திருவெண்ணெய்நல்லூர். பண்-இந்தளம்.

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
எத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை [டுறையுள்
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௨௪)

௭-ம் திரு. திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியேன்
இல்லையேயென்னாதவியற்பகைக்குமடியேன்
இளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டர்க்கடியேன்
அல்லிமென்முல்லைந்தாரமர்நீதிக்கடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)



மாணிக்கவாசகசுவாமிகள்.

திருவாசகம்.

௮-ம் திரு. திருச்சதகம்.

மெய்தானரும்பிவிதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே. ( )

திருக்கோவையார்.

௮-ம் திரு.

திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக் [தெய்வ
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்கு
மருவளர்மாலையொர்வல்லியினொல்கியனநடைவாய்ந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே.

திருமாளிகைத்தேவர்.

திருவிசைப்பா.

௯-ந் திரு. கோயில். பண்-பஞ்சமம்.

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றே
உணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
அளிவளருள்ளத்தானந்தக்கனியே
அம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்
தொண்டனேன்விளம்புமாவிளம்பே. (௨௮)

சேந்தனார்.

திருப்பல்லாண்டு.

௯-ந் திரு. கோயில். பண்-பஞ்சமம்.

மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகலப் [ளங்க
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெலாம்வி
அன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து [மே
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டு கூறு…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூல நாயனார்.

திருமந்திரம்.

௧௦-ந் திரு.

ஒன்றவன்றானேயிரண்டவனின்னருள்
நின்றனன்மூன்றினுணான்குணர்ந்தானைந்து
வென்றனனாறுவிரிந்தனனேழும்பர்ச்
சென்றனன்றானிருந்தானுணர்ந்தெட்டே. (௰)

காரைக்காலம்மையார்.

அற்புதத் திருவந்தாதி.

௧௧-ந் திரு.

பிறந்துமொழிபயின்றபின்னெல்லாங்காதல்
சிறந்துநின்சேவடியேசேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
எஞ்ஞான்றுதீர்ப்பதிடர். (௰௧)

திருத்தொண்டர் பெரியபுராணம்.

௧௨-ந் திரு.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம். (௰௨)

திருச்சிற்றம்பலம்.

## ௨-ம் வகுப்பு.

தேவாரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

௧-ந் திரு. திருவண்ணாமலை. பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரும்
அண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (௧)



௨-ந் திரு. திருவாலவாய். திருநீற்றுப்பதிகம். பண்-காந்தாரம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயான்றிருநீறே. (௨)

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே. (௩)

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. (௪)

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. (௫)

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசைகெடுப்பதுநீறு வந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறு திருவாலவாயான்றிருநீறே. (௬)

அருத்தமதாவதுநீறு வவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே. (௭)

எயிலதுவட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே. (௮)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன்மேலது நீறு எண்ணத்தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே. (௯)

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளது நீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவது நீறு
ஆலமதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. (௧௦)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடாக்
கண்டிகைப்பிப்பது நீறு கருதவினியது நீறு
எண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையது நீறு
அண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான்றிருநீறே. (௧௧)

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவு பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. (௧௨)

௩-ந் திரு. பஞ்சாக்கரத்திருப்பதிகம். பண் காந்தாரபஞ்சமம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினும்
நெஞ்சகநைந்துநினைமினாடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே. (௧௩)

திருநாவுக்கரசுநாயனார்.

௪-ந் திரு. நமச்சிவாயத்திருப்பதிகம். பண்-காந்தாரம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே. (௧௪)



௪-ந் திரு. திருப்புகலூர். பண்-இந்தளம்.

செய்யர்வெண்ணூலர்கருமான்மறிதுள்ளுங்
கையர்கனைகழல்கட்டியகாலினர்
மெய்யர்மெய்ந்நின்றவர்க்கல்லாதவர்க்கென்றும்
பொய்யர்புகலூர்ப்புரிசடையாரே. (௧௫)

௪-ந் திரு. திருவொற்றியூர். திருநேரிசை.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
ஓம்பிநீயுய்யக்கொள்வாயொற்றியூருடையகோவே. (௧௬)

௪-ந் திரு. திருத்தூங்கானைமாடம். திருவிருத்தம்.

பொன்னார்திருவடிக்கொன்றுண்டுவிண்ணப்பம்போற்றிசெய்யும்
என்னாவிகாப்பதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்டல்
துன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே. (௧௭)

௫-ந் திரு. திருமறைக்காடு. திருக்குறுந்தொகை.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்மினே. (௧௮)

௬-ந் திரு. திருநாகைக்காரோணம். திருத்தாண்டகம்.

பாரார்பரவும்பழனத்தானைப்
பருப்பதத்தானைப்பைஞ்ஞீலியானைச்
சீரார்செழும்பவளக்குன்றொப்பானைத்
திகழுந்திருமுடிமேற்றிங்கள்சூடிப்
பேராயிரமுடையபெம்மான்றன்னைப்
பிறர்தன்னைக்காட்சிக்கரியான்றன்னைக்
காரார்கடல்புடைசூழ்ந்தநாகைக்
காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (௧௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணோர்பெருமானைவீரட்டானை
வெண்ணீறுமெய்க்கணிந்தமேனியானைப்
பெண்ணானையாணைப்பேடியானைப்
பெரும்பற்றத்தண்புலியூர்பேணினானை
அண்ணாமலையானையானைந்தாடும்
அணியாரூர்வீற்றிருந்தவம்மான்றன்னைக்
கண்ணார்கடல்புடைசூழ்ந்தணாகைக்
காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (௨௦)

௬-ந் திரு திருச்சிவபுரம். திருத்தாண்டகம்.

வானவன்காண்வானவர்க்குமேலானான்காண்
வடமொழியுந்தென்றமிழும்மறைகணான்கும்
ஆனவன்காணானைந்துமாடினான்காண்
ஐயன்காண்கையிலனலேந்தியாடுங்
கானவன்காண்கானவனுக்கருள்செய்தான்காண்
கருதுவாரிதயத்துக்கமலத்தூறுந்
தேனவன்காண்சென்றடையாச்செல்வன்றான்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. ()

௬-ந் திரு. திருவாரூர். திருத்தாண்டகம்.

நிலைபெறுமாறெண்ணுதியேனெஞ்சேநீவா
நித்தலுமெம்பிரானுடையகோயில்புக்குப்
புலர்வதன்முனலகிட்டுமெழுக்குமிட்டுப்
பூமாலைபுனைந்தேத்திப்புகழ்ந்துபாடித்
தலையாரக்கும்பிட்டுக்கூத்துமாடிச்
சங்கராசயபோற்றிபோற்றியென்றும்
அலைபுனல்சேர்செஞ்சடையெம்மாதீயென்றும்
ஆரூராவென்றென்றேயலறுநில்லே. (௨௨)

சுந்தரமூர்த்திநாயனார்.

௭-ந் திரு. திருக்கோளிலி. பண்-நட்டராகம்.

நீளநினைந்தடியேனுமைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே [ன்
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
ஆளிலையெம்பெருமானவையட்டித்தரப்பணியே. (௨௩)



௭-ந் திரு. திருமழபாடி. பண்-நட்டராகம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
அன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௨௪)

௭-ந் திரு. திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

இலைமலிந்தவேனம்பியெறிபத்தர்க்கடியேன்
ஏனாதிநாதன்றனடியார்க்குமடியேன்
கலைமலிந்தசீர்நம்பிகண்ணப்பற்கடியேன்
கடவூரிற்கலையன்றனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளன்மானக்கஞ்சாறன்
எஞ்சாதவாட்டாயனடியார்க்குமடியேன்
அலைமலிந்தபுனன்மங்கையானயர்க்கடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)

மாணிக்கவாசகசுவாமிகள்.

௮-ந் திரு. திருவாசகம். நீத்தல்விண்ணப்பம்.

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்றோல்
உடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே [ளே.
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்

௮-ந் திரு. திருக்கோவையார்.

அணியுமமிழ்துமென்னாவியுமாயதன்றில்லைச்சிந்தா
மணியும்பராரறியாமறையோனடிவாழ்த்தலிற்
பிணியுமதற்குமருந்தும்பிறழப்பிறழுமின்னும்
பணியும்புரைமருங்கிற்பெருந்தோழிபடைக்கண்களே. (௨௭)

௯-ந் திரு. திருவிசைப்பா. கோயில் பண்-பஞ்சமம்.

கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியைக்
கரையிலாக்கருணைமாகடலை
மற்றவரறியாமாணிக்கமலையை
மதிப்பவர்மனமணிவிளக்கைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர்புரங்கள்செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலைவீற்றிருந்த
கொற்றவன்றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிரவென்கண்குளிர்ந்தனவே. (௨௮)

௯-ந் திரு. திருப்பல்லாண்டு. கோயில் பண்-பஞ்சமம்.

மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள்விரைந்தவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட்செய்மின்குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருளளவில்லதோரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே. (௨௯)

க0-ந் திரு. திருமந்திரம்.

அன்புசிவமிரண்டென்பரறிவிலார்
அன்பேசிவமாவதாருமறிகிலார்
அன்பேசிவமாவதாருமறிந்தபின்
அன்பேசிவமாயமர்ந்திருப்பாரே. (௩0)

கக-ந் திரு. பொன்வண்ணத்தந்தாதி.

பொன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கு
மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந்
தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட
என்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமாகியவீசனுக்கே. (௩௧)

கஉ-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

ஊனடைந்தவுடம்பின்பிறவியே
தானடைந்தவுறுதியைச்சாருமால்
தேனடைந்தமலர்ப்பொழிற்றில்லையுள்
மாநடஞ்செய்வார்பொற்றொழ. (௩௨)

திருச்சிற்றம்பலம்.

## ௩-ம் வகுப்பு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

க-ந் திரு. திருச்செங்காட்டங்குடி. பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நறைகொண்டமலர்தூவிவிரையளிப்பநாடோறும்
முறைகொண்டுநின்றடியார்முட்டாமேபணிசெய்யச்
சிறைகொண்டவண்டறையுஞ்செங்காட்டங்குடியதனுட்
கறைகொண்டகண்டத்தான்சணபதீச்சரத்தானே. (௧)



௧-ந் திரு. திருப்பராய்த்துறை. பண்-மேகராகக் குறிஞ்சி.

நீறுசேர்வதொர்மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர்கோலமாய்ப்
பாறுசேர்தலைக்கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடையண்ணலே. (௨)

௨-ந் திரு. திருவெண்காடு. பண்-சீகாமரம்.

பேயடையாபிரிவெய்தும்பிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே. (௩)

௩-ந் திரு. பல்லவனீச்சரம். பண்-பழம்பஞ்சுரம்.

பரசுபாணியர்பாடல்வீணையர்
பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தரசுபேணிநின்றாரிவர்தன்மையறிவாரார். (௪)

பட்டநெற்றியர்நட்டமாடுவர்
பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திட்டமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (௫)

திருநாவுக்கரசுநாயனார்.

௪-ந் திரு. திருவாரூர். பண்-காந்தாரம்.

பாடிளம்பூதத்தினானும்பவளச்செவ்வாய்வண்ணத்தானும்
கூடிளமென்முலையாளைக்கூடியகோலத்தினானும்
ஓடிளவெண்பிறையானுமொளிதிகழ்சூலத்தினானும்
ஆடிளம்பாம்பசைத்தானும் ஆரூரமர்ந்தவம்மானே. (௬)

௪-ந் திரு. திருவொற்றியூர். திருநேரிசை.

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணா
துனையுனுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே. (௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௪-ந் திரு. கோயில் திருவிருத்தம்.

படைக்கலமாகவுன்னாமத்தெழுத்தஞ்சென்னாவிற்கொண்டேன்
இடைக்கலமல்லேனெழுபிறப்புமுனக்காட்செய்கின்றேன்
துடைக்கினும்போகேன்றொழுதுவணங்கித்தூநீறணிந்துன்
அடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே. (௮)

௫-ந் திரு. திருக்குறுந்தொகை.

மாசில்வீணையும்மாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனிலும்
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
ஈசனெந்தையிணையடிநீழலே. (௯)

நமச்சிவாயவேஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவேநானறிவிச்சையும்
நமச்சிவாயவேநாநவின்றேத்துமே
நமச்சிவாயவேநன்னெறிகாட்டுமே. (௧௦)

ஆளாகாராளானாரையடைந்துய்யார்
மீளாவாட்செய்துமெய்ம்மையுணிற்கிலார்
தோளாதசுரையோதொழும்பர்செவி
வாளாமாய்ந்துமண்ணாகிக்கழிவரே. (௧௧)

நடலைவாழ்வுகொண்டென்செய்திர்நாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டால்
உடலினார்கிடந்தூர்முனிபண்டமே. (௧௨)

பூக்கைக்கொண்டரன்பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டரனாமநவில்கிலார்
ஆக்கைக்கேயிரைதேடியலமந்து
காக்கைக்கேயிரையாகிக்கழிவரே. (௧௩)

குறிகளும்மடையாளமுங்கோயிலும்
நெறிகளும்மவர்நின்றதோர்நேர்மையும்



அறியவாயிரமாரணமோதினும்
பொறியிலீர்மனமென்கொல்புகாததே. (௧௪)

வாழ்த்தவாயுநினைக்கமடநெஞ்சும்
தாழ்த்தச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே. (௧௫)

எழுதுபாவைநல்லார்திறம்விட்டுநான்
தொழுதுபோகநின்றேனையுஞ்சூழ்ந்துகொண்
டுழுதகால்வழியேயுழுவான்பொருட்
டிழுதைநெஞ்சமிதென்படுகின்றதே. (௧௬)

நெக்குநெக்குநினைபவர்நெஞ்சுளே
புக்குநிற்கும்பொன்னார்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர்பூவுநீருங்கண்டு
நக்குநிற்பரவர்தமைநாணியே. (௧௭)

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன்மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வுக்கயிற்றினான்
முறுகவாங்கிக்கடையமுனிற்குமே. (௧௮)

௬-ந் திரு. திருப்புள்ளிருக்குவேளூர். திருத்தாண்டகம்.

பேராயிரம்பரவிவானோரேத்தும்
பெம்மானைப்பிரிவிலாவடியார்க்கென்றும்
வாராதசெல்வம்வருவிப்பானை
மந்திரமுந்தந்திரமும்மருந்துமாகித்
தீராநோய்தீர்த்தருளவல்லான்றன்னைத்
திரிபுரங்கடீயெழத்திண்சிலைகைக்கொண்ட
போரானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாட்போக்கினேனே. (௧௯)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௬-ந் திரு. திருப்பாசூர். திருத்தாண்டகம்.

விண்ணாகிநிலனாகிவிசும்புமாகி
வேலைசூழ்ஞாலத்தார்விரும்புகின்ற
எண்ணாகியெழுத்தாகியியல்புமாகி
ஏழுலகுந்தொழுதேத்திக்காணநின்ற
கண்ணாகிமணியாகிக்காட்சியாகிக்
காதலித்தங்கடியவர்கள்பரவநின்ற
பண்ணாகியின்னமுதாம்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (௨௦)

௬-ந் திரு. திருவாரூர். திருத்தாண்டகம்.

உயிராவணமிருந்துற்றுநோக்கி
உள்ளக்கிழியினுருவெழுதி
உயிராவணஞ்செய்திட்டுன்கைத்தந்தால்
உணரப்படுவாரோடொட்டிவாழ்தி
அயிராவணமேறாதானேறி
அமரர்நாடாளாதேயாரூராண்ட
அயிராவணமேயென்னம்மானேநின்
அருட்கண்ணானோக்காதாரல்லாதாரே. (௨௧)

௬-ந் திரு. திருவினாத் திருத்தாண்டகம்.

மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சி
மயானத்தான்வார்சடையானென்னினல்லால்
ஒப்புடையனல்லனொருவனல்லன்
ஓரூரனல்லனோருவமனில்லி
அப்படியுமந்நிறமுமவ்வண்ணமும்
அவனருளேகண்ணாகக்காணினல்லால்
இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்தன்
இவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே. ()



சுந்தரமூர்த்திநாயனார்.

௭-ந் திரு. திருக்கடவூர். பண்-நட்டராகம்.

மண்ணீர்தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே
கண்ணாருண்மணியேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. ()

௭-ந் திரு. திருக்கேதீச்சரம். பண்-நட்டபாடை.

நத்தார்படைஞானன்பசுவேறிநனைகவுள்வாய்
மத்தம்மதயானையுரிபோர்த்தமணவாளன்
பத்தாகியதொண்டர்தொழுபாலாவியின்கரைமேற்
செத்தாரெலும்பணிவான்திருக்கேதீச்சரத்தானே. (௨௪)

௭-ந் திரு திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

மும்மையாலுலகாண்டமூர்த்திக்குமடியேன்
முருகனுக்குமுருத்திரபசுபதிக்குமடியேன்
செம்மையேதிருநாளைப்போவார்க்குமடியேன்
திருக்குறிப்புத்தொண்டர்தம்மடியார்க்குமடியேன்
மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிற்க
வெகுண்டெழுந்ததாதையைமழுவினாலெறிந்த
அம்மையானடிச்சண்டிப்பெருமானுக்கடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)

மாணிக்கவாசகசுவாமிகள்.

௮-ந் திரு. திருவாசகம். கோயின்மூத்ததிருப்பதிகம்.

உடையாளுன்றநடுவிருக்குமுடையாணடுவுணீயிருத்தி
அடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியேனுன்
அடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்துமுடியும்வண்ணமுன்னின்றே. ()

௮-ந் திரு. திருக்கோவையார்.

சிந்தாமணிதெண்கடலமிர்தந்தில்லையானருளால்
வந்தாலிகழப்படுமேமடமான்விழிமயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தாமரையன்னமேநின்னையானகன்றாற்றுவனோ
சிந்தாகுலமற்றென்னோடென்னைவாட்டந்திருத்துவதே. ()

௯-ந் திரு. திருவிசைப்பா. திருவீழிமிழலை. பண்-பஞ்சமம்.

இத்தெய்வநெறிநன்றென்றிருண்மாயப்
பிறப்பறாவிந்திரசாலப்
பொய்த்தெய்வநெறிநான்புகாவகைபுரிந்த
புராணசிந்தாமணிவைத்த
மெய்த்தெய்வநெறிநான்மறையவர்வீதி
மிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
அத்தெய்வநெறியிற்சிவமலாதவையும்
அறிவரோஅறிவுடையோரே. (௨௮)

௯-ந் திரு. திருப்பல்லாண்டு. கோயில். பண்-பஞ்சமம்.

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்டநிகரிலாவண்ணங்களு
சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந்திறங்களுமேசிந்தித் [ஞ்
அட்டமூர்த்திக்கென்னகநெகவூறுமமிர்தினுக்காலநிழற்
பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கேபல்லாண்டு கூறு
[துமே.

௧௦-ந் திரு. திருமந்திரம்.

நான்பெற்றவின்பம்பெறுகவிவ்வையகம்
வான்பற்றிநின்றமறைப்பொருள்சொல்குவன்
ஊன்பற்றிநின்றவுணர்வுறுமந்திரந்
தான்பற்றப்பற்றத்தலைப்படுந்தானே. (௯௰)

௧௧-ந் திரு. பொன்வண்ணத்தந்தாதி.

சொல்லாதனகொழுநாவல்லசோதியுட்சோதிதன்பேர்
செல்லாச்செவிமரந்தேறித்தொழாதகைமண்டிணிந்த
கல்லாநினையாமனம்வணங்காத்தலையும்பொறையாம்
அல்லாவவயவந்தானும்மனிதர்க்கசேதனமே. (௯௧)



௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

தண்ணளிவெண்குடைவேந்தன்செயல்கண்டுதரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்தார்வானவர்பூமழைபொழிந்
அண்ணலவன்கண்ணெதிரேயணிவீதிமழவிடைமேல் [தார்
விண்ணவர்கடொழநின்றான்வீதிவிடங்கப்பெருமான். ()

திருச்சிற்றம்பலம்.

## ௪-ம் வகுப்பு.

தேவாரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

௧-ந் திரு. திருக்கோளிலி. பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நாளாயபோகாமேநஞ்சணியுங்கண்டனுக்கே
ஆளாயவன்புசெய்வோமடநெஞ்சேயரனாமங்
கேளாய்நங்கிளைகிளைக்குங்கேடுபடாத்திறமருளிக்
கோளாயநீக்குமவன்கோளிலியெம்பெருமானே. (௧)

௨-ந் திரு. திருச்சாய்க்காடு. பண்-சீகாமரம்.

மண்புகார்வான்புகுவர்மனமிளையார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்சாய்க்காட்டெந்தலைவன்றாள்சார்ந்தாரே. ()

௩-ந் திரு. நமச்சிவாயப்பதிகம். பண்-கௌசிகம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
ஓதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே. (௩)

நம்புவார்நமர்நாமநவிற்றினல்
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பொனார்திலகம்முலகுக்கெலா
நம்பனாமநமச்சிவாயவே. (௪)

நெக்குளார்வமிகப்பெருகிநினைந்
தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்
தக்கவானவராய்த்தகுவிப்பது
நக்கனாமநமச்சிவாயவே. (௫)

இயமன்றூதருமஞ்சுவரின்சொலால்
நயம்வந்தோதவல்லார்தமைநண்ணினால்
நியமந்தானினைவார்க்கினியானெற்றி
நயனநாமநமச்சிவாயவே. (௬)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைகள்
இல்லாரேனுமியம்புவராயிடின்
எல்லாத்தீங்கையுநீக்குவரென்பரால்
நல்லார்நாமநமச்சிவாயவே. (௭)

மந்தரம்மனபாவங்கண்மேவிய
பந்தனையவர்தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமால்
நந்திநாமநமச்சிவாயவே. (௮)

நரகமேழ்புகநாடினராயினும்
உரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடுமென்பரால்
வரதனாமநமச்சிவாயவே. (௯)

இலங்கைமன்னனெடுத்தவடுக்கன்மேல்
தலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலும்
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொளாமநமச்சிவாயவே. (௧௦)

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பரா



யாதுங்காண்பரிதாகியலந்தவர்
ஓதுநாமநமச்சிவாயவே. (௧௧)

கஞ்சிமண்டையர்கையினுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர்விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய்
நஞ்சுள்கண்டனமச்சிவாயவே (௧௨)

நந்திநாமநமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெலாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. (௧௩)

திருநாவுக்கரசுநாயனார்.

௪-ந் திரு. திருவாரூர். பண்-சீகாமரம்.

சூலப்படையானைச்சூழாகவீழருவிக்
கோலத்தோட்குங்குமஞ்சேர்குன்றெட்டுடையானைப்
பாலொத்தமென்மொழியாள்பங்கனைப்பாங்காய
ஆலத்தின்கீழானைநான்கண்டதாரூரே. (௧௪)

௪-ந் திரு. திருவாரூர். திருவிருத்தம்.

வேம்பினைப்பேசிவிடக்கினையோம்பிவினைபெருக்கித்
தூம்பினைத்தூர்த்தங்கோர்சுற்றந்துணையென்றிருந்திர்தொண்டீர்
ஆம்பலம்பூம்பொய்கையாரூரமர்ந்தானடிநிழற்கீழ்ச்
சாம்பலைப்பூசிச்சலமின்றித்தொண்டுபட்டுய்மின்களே. (௧௫)

௪-ந் திரு. திருமறைக்காடு. திருநேரிசை.

விண்ணினார்விண்ணின்மிக்கார்வேதங்கள்விரும்பியோதப்
பண்ணினார்கின்னரங்கள்பத்தர்கள்பாடியாடக்
கண்ணினார்கண்ணினுள்ளேசோதியாய்நின்றவெந்தை
மண்ணினார்வலங்கொண்டேத்துமாமறைக்காடனாரே. (௧௬)

௫-ந் திரு. திருக்குடமூக்கு. திருக்குறுந்தொகை.

காமியஞ்செய்துகாலங்கழியாதே
ஓமியஞ்செய்தங்குள்ளத்துணர்மினோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியோடுசரச்சுவதியவள்
கோமியும்முறைபுங்குடமூக்கிலே. (௧௭)

௬-ந் திரு. திருநல்லூர். திருத்தாண்டகம்.

நினைந்துருகுமடியாரைநையவைத்தார்
நில்லாமேதீவினைகணீங்கவைத்தார்
சினந்திருகுகளிற்றுருவைப்போர்வைவைத்தார்
செழுமதியின்றளிர்வைத்தார்சிறந்துவானோர்
இனந்துருவிமணிமகுடத்தேறத்துற்ற
இனமலர்கள்போதவிழ்ந்துமதுவாய்ப்பில்கி
நனைந்தனையதிருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (௧௮)

௬-ந் திரு. திருவீழிமிழலை. திருத்தாண்டகம்.

கண்ணவன்காண்கண்ணொளிசேர்காட்சியான்காண்
கந்தருவம்பாட்டிசையிற்காட்டுகின்ற
பண்ணவன்காண்பண்ணவற்றின்றிறலானான்காண்
பழமாகிச்சுவையாகிப்பயக்கின்றான்காண்
மண்ணவன்காண்டீயவன்காணீரானான்காண்
வந்தலைக்குமாருதன்காண்மழைமேகஞ்சேர்
விண்ணவன்காண்விண்ணவர்க்குமேலானான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௧௯)

௬-ந் திரு. திருவாலவாய். திருத்தாண்டகம்.

வாயானைமனத்தானைமனத்துணின்ற
கருத்தானைக்கருத்தறிந்துமுடிப்பான்றன்னைத்
தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச்
சுடர்த்திங்கட்சடையானைத்தொடர்ந்துநின்ற
தாயானைத்தவமாயதன்மையானைத்
தலையாயதேவாதிதேவர்க்கென்றுஞ்
சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௨௦)

௬-ந் திரு. நின்ற திருத்தாண்டகம்.

மண்ணாகிவிண்ணாகிமலையுமாகி
வயிரமுமாமாணிக்கந்தானேயாகிக்



கண்ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக்
கலையாகிக்கலைஞானந்தானேயாகிப்
பெண்ணாகிப்பெண்ணுக்கோராணுமாகிப்
பிரளயத்துக்கப்பாலோரண்டமாகி
எண்ணாகியெண்ணுக்கோரெழுத்துமாகி
எழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௨௧)

சுந்தரமூர்த்திநாயனார்.

௭-ந் திரு. திருவாரூர். பண்-இந்தளம்.

இறைகளோடிசைந்தவின்பமின்பத்தோடிசைந்தவாழ்வு
பறைகிழித்தனையபோர்வைபற்றியானொக்கினேற்குத்
திறைகொணர்ந்தீண்டித்தேவர்செம்பொனுமணியுந்தூவி
அறைகழலிறைஞ்சுமாரூரப்பனேயஞ்சினேனே. (௨௨)

௭-ந் திரு. திருப்பாண்டிக்கொடுமுடி. பண்-பழம்பஞ்சுரம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௨௩)

௭-ந் திரு. திருவாரூர். பண்-பழம்பஞ்சுரம்.

ஏழிசையாயிசைப்பயனாயின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந்துரிசுகளுக்குடனாகி
மாழையொண்கண்பரவையைத்தந்தாண்டானைமதியில்லா
ஏழையேன்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௨௪)

௭-ந் திரு. திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன்
பெருநம்பிகுலச்சிறைதனடியார்க்குமடியேன்
பெருமிழலைக்குறும்பர்க்கும்பேயார்க்குமடியேன்
ஒருநம்பியப்பூதியடியார்க்குமடியேன்
ஒலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கர்க்கடியேன்
அருநம்பிநமிநந்தியடியார்க்குமடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகசுவாமிகள்.

அ-ந் திரு. திருவாசகம். கோயின்மூத்ததிருப்பதிகம்.

அன்பினாலடியேனாவியோடாக்கையானந்தமாய்க்கசிந்துருக
என்பரமல்லாவின்னருடந்தாயானிதற்கிலனொர்கைம்மாறு
முன்புமாய்ப்பின்புமுழுதுமாய்ப்பரந்தமுத்தனேமுடிவிலாமுதலே
தென்பெருந்துறையாய்சிவபெருமானேசீருடைச்சிவபுரத்தரசே. (உகூ)

அ-ந் திரு. திருக்கோவையார்.

சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளும்
உறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின்
துறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
இறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே. (உஎ)

கூ-ந் திரு. திருவிசைப்பா. திருவீழிமிழலை. பண்-பஞ்சமம்.

மாலுலாமனந்தந்தென்கையிற்சங்கம்
வவ்வினான்மலைமகண்மதலை
மேலுலாந்தேவர்குலமுழுதாளுங்
குமரவேள்வள்ளிதன்மணாளன்
சேலுலாங்கழனித்திருவிடைக்கழியில்
திருக்குராநீழற்கீழ்நின்ற
வேலுலாந்தடக்கைவேந்தனென்சேந்தன்
என்னுமென்மெல்லியலிவளே. (உஅ)

கூ-ந் திரு. திருப்பல்லாண்டு. கோயில். பண்-பஞ்சமம்.

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்த
தூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்
சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரண்மேரு
விடங்கன்விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. (உகூ)



கO-ந் திரு. திருமந்திரம்.

அவனுமவனுமவனையறியார்
அவனையறியுமறிவானுமில்லை
அவனுமவனுமவனையறியின்
அவனுமவனுமவனிவனாமே. (௩O)

கக-ந் திரு. பொன்வண்ணத்தந்தாதி.

ஒழித்தேன்பிறவியையூர்ந்தேனுவகையையோங்கிற்றுள்ளம்
இழித்தேனுடம்பினையேலேன்பிறரிடைப்பின்னையும்
பழித்தேன்பழியேவிளைக்கும்பஞ்சேந்தியக்குஞ்சரமுந்
தெழித்தேன்சிவனடிசேர்ந்தேனினிமிகத்தெள்ளியனே. ()

கஉ-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

தெண்ணிலாமலர்ந்தவேணியாயுன்றன்றிருநடங்கும்பிடப்பெற்று
மண்ணிலேவந்தபிறவியேயெனக்குவாலிதாமின்பமாமென்று
கண்ணிலானந்தவருவிநீர்சொரியக்கைம்மலருச்சிமேற்குவித்துப்
பண்ணினாணீடியறிவரும்பதிகம்பாடினார்பரவினார்பணிந்தார். (௩உ)

திருச்சிற்றம்பலம்.

## ரு-ம் வகுப்பு.

தேவாரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

க-ந் திரு. திருவண்ணாமலை. பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித்தொறுவினிரையோடும்
ஆமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௧-ம் திரு. கோயில். பண்-குறிஞ்சி.

கற்றுங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றுவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றுநின்றாரைப்பற்றாபாவமே. (௨)

பறப்பைபடுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப்பின்றாள்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையறீர்வாரே. (௩)

மைபாரொண்கண்ணார்மாடநெடுவீதிக்
கைபாற்பந்தோச்சுங்கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறைபாடல்புரிந்தானுலகேத்தச்
செய்யானுறைகோயில்சிற்றம்பலந்தானே. (௪)

நிறைவெண்கொடிமாடநெற்றிநேர்தீண்டப்
பிறைவந்திறைதாக்கும்பேரம்பலந்தன்னைச்
சிறைவண்டறையோவாச்சிற்றம்பலமேய
இறைவன்கழலேத்துமின்பமின்பமே. (௫)

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வம்செல்வமே. (௬)

வருமாந்தளிர்மேனிமாதோர்பாகமாந்
திருமாந்தில்லையுட் சிற்றம்பலமேய
கருமானுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற்பேணாதுள்ளமே. (௭)

அலையார்புனல்சூடியாகத்தொருபாக
மலையான்மகளோடுமகிழ்ந்தானுலகேத்தச்
சிலையாலெயிலெய்தான்சிற்றம்பலந்தன்னைத்
தலையால்வணங்குவார்தலையானார்களே. (௮)



கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே. (௯)

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே. (௧௦)

பட்டைத்துவராடைப்படிமங்கொண்டாடு
முட்டைக்கட்டுரைமொழிவகேளாதே
சிட்டர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
நட்டப்பெருமானைநாளுந்தொழுவோமே. (௧௧)

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தார்பாடவல்லார்நல்லாரே. (௧௨)

௨-ம் திரு. திருமயிலாப்பூர். பண்-சீகாமரம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய். (௧௩)

௩-ந் திரு. கோயில் பண்-காந்தாரபஞ்சமம்.

ஆடினாய்நறுநெய்யொடுபாறயிரந்தணர்பிரியாதசிற்றம்பல
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே [ண்டிங்கள்
பாடினாய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்வெ
சூடினாயருளாய்சுருங்கவெம்தொல்வினையே. (௧௪)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசுநாயனார்.

ச-ந் திரு. திருவேகம்பம். பண்-காந்தாரம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
அரவாடச்சடைதாழவங்கையினிலனலேந்தி
இரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. ()

ச-ம் திரு. திருக்கடவூர்வீரட்டம். திருநேரிசை.

பெரும்புலர்காலைமூழ்கிப்பித்தற்குப்பத்தராகி
அரும்பொடுமலர்கள்கொண்டங்கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல்விளக்குத்தூபம்விதியினாலிடவல்லார்க்குக்
கரும்பினிற்கட்டிபோல்வார்கடவூர்வீரட்டனாரே. (கசு)

ச-ம் திரு. திருச்சத்திமுற்றம். திருவிருத்தம்.

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (கஎ)

ரு-ம் திரு. திருவிடைமருதூர். திருக்குறுந்தொகை.

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினுந்
தனிமுடிகவித்தாளுமரசினும்
இனியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே. (கஅ)

சு-ந் திரு. திருவாரூர். திருத்தாண்டகம்.

திருமணியைத்தித்திக்குந்தேனைப்பாலைத்
தீங்கரும்பினின்சுவையைத்தெளிந்ததேறற்
குருமணியைக்குழன்மொந்தைதாளம்வீணை
கொக்கரையின்சச்சரியின்பாணியானைப்
பருமணியைப்பவளத்தைப்பசும்பொன்முத்தைப்
பருப்பதத்திலருங்கலத்தைப்பாவந்தீர்க்கும்



அருமணியையாரூரிலம்மான்றன்னை
அறியாதடிநாயேனயர்த்தவாறே. (ககூ)

சு-ந் திரு. திருவாரூர். திருத்தாண்டகம்.

முன்னமவனுடையநாமங்கேட்டாள்
மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டாள்
பின்னையவனுடையவாரூர்கேட்டாள்
பெயர்த்துமவனுக்கேபிச்சியானாள்
அன்னையையுமத்தனையுமன்றேநீத்தாள்
அகன்றாளகலிடத்தாராசாரத்தைத்
தன்னைமறந்தாடன்னாமங்கெட்டாள்
தலைப்பட்டாணங்கைதலைவன்றாளே. (உ0)

சு-ந் திரு. திருமறைக்காடு. திருத்தாண்டகம்.

தூண்டுசுடரனையசோதிகண்டாய்
தொல்லமரர்சூளாமணிதான்கண்டாய்
காண்டற்கரியகடவுள்கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்கண்டாய்
வேண்டுவார்வேண்டுவதேயீவான்கண்டாய்
மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (உக)

ஐயினான்மிடறடைப்புண்டாக்கைவிட்டு
ஆவியார்போவதுமேயகத்தார்கூடி
மையினாற்கண்ணெழுதிமாலைசூட்டி
மயானத்திலிடுவதன்முன்மதியஞ்சூடும்
ஐயனார்க்காளாகியன்புமிக்கு
அகங்குழைந்துமெய்யரும்பியடிகள்பாதங்
கையினாற்றொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. (உஉ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்திநாயனார்.

எ-ந் திரு. திருப்புகலூர். பண்-கொல்லி.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்கெடலுமாம்
அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௨௩)

எ-ந் திரு. திருப்புன்கூர். பண்-தக்கேசி.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுத
அவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனாருயிரதனை
வவ்வினாய்க்குன்றன்வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனைநமன்றமர்நலியில்
இவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௨௪)

எ-ம் திரு. திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

வம்பறாவரிவண்டுமணநாறமலரும்
மதுமலர்நற்கொன்றையானடியலாற்பேணா
எம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியேன்
ஏயர்கோன்கலிக்காமனடியார்க்குமடியேன்
நம்பிரான்றிருமூலனடியார்க்குமடியேன்
நாட்டமிகுதண்டிக்குமூர்க்கற்குமடியேன்
அம்பரான்சோமாசிமாறனுக்குமடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)

மாணிக்கவாசகசுவாமிகள்.

அ-ந் திரு. திருவாசகம். அடைக்கலப்பத்து.

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
அழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே. (௨௬)



அ-ந் திரு. திருக்கோவையார்.

நேயத்ததாய்நென்னலென்னைப்புணர்ந்துநெஞ்சநெகப்போ
ஆயத்ததாயமிழ்தாயணங்காயரனம்பலம்போல் [ய்
தேயத்ததாயென்றன்சிந்தையதாய்த்தெரியிற்பெரிது
மாயத்ததாகியிதோவந்துநின்றதென்மன்னுயிரே. (௨௭)

௯-ந் திரு. திருவிசைப்பா. கோயில். பண்-பஞ்சமம்.

இவ்வரும்பிறவிப்பௌவநீர்நீந்தும்
ஏழையேற்கென்னுடன்பிறந்த
ஐவரும்பகையேயார்துணையென்று
லஞ்சலென்றருள்செய்வான்கோயில்
கைவரும்பழனங்குழைத்தசெஞ்சாலிக்
கடைசியர்களைதருநீலஞ்
செய்வரம்பரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (௨௮)

௯-ந் திரு. திருப்பல்லாண்டு. கோயில் பண்-பஞ்சமம்.

சீருந்திருவும்பொலியச்சிவலோகநாயகன்சேவடிக்கீழ்
ஆரும்பெறாதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகில்
ஊருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. (௨௯)

௰-ந் திரு. திருமந்திரம்.

அகாரமாயிரமந்தணர்க்கீயிலென்
சிகரகோபுரஞ்செய்துமுடிக்கிலென்
பகருஞானிபகலூண்பலத்துக்கு
நிகரிலையென்பதுநிச்சயந்தானே. (௩0)

௧௧-ந் திரு. கைலைபாதி காளத்திபாதி.

சொல்லும்பொருளுமேதூத்திரியுநெய்யுமா
நல்விடிஞ்சியென்னுடையநாவாகச்—சொல்லரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பாவிளக்காவியன்கயிலைமேலிருந்த
பெண்பாகர்க்கேற்றினேன்பெற்று. (௩௧)

௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

ஆதியாநடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி. (௩௨)

திருச்சிற்றம்பலம்.

## ௩-ம் வகுப்பு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

௧-ந் திரு. திருநள்ளாறு. பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாடன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௧)

௨-ம் திரு. திருப்புள்ளிருக்குவேளூர். பண்-சீகாமரம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே. (௨)

௩-ந் திரு. திருவாவடுதுறை. பண்-காந்தாரபஞ்சமம்.

இடரினுந்தளரினுமெனதுறுநோய்தொடரினுமுனகழறொழுதெழுவேன்
கடறனிலமுதொடுகலந்தநஞ்சை மிடறினிலடக்கியவேதியனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (௩)



திருநாவுக்கரசுநாயனார்.

௪-ந் திரு. திருவதிகைவீரட்டானம். பண்-காந்தாரம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமும்
அண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவுந்
திண்ணென்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௪)

௪-ந் திரு. திருவாவடுதுறை. திருநேரிசை.

மஞ்சனேமணியுமானாய்மரகதத்திரளுமானாய்
நெஞ்சுளேபுகுந்துநின்றுநினைதருநிகழ்வினானே
துஞ்சும்போதாகவந்துதுணையெனக்காகிநின்று
அஞ்சலென்றருளவேண்டுமாவடுதுறையுளானே. (௫)

௪-ந் திரு. திருவாரூர். திருவிருத்தம்.

ஆராய்ந்தடித்தொண்டராணிப்பொனாரூரகத்தடக்கிப்
பாரூர்பரிப்பத்தம்பங்குனியுத்தரம்பாற்படுத்தா
னாரூர்நறுமலர்நாதனடித்தொண்டனம்பிநந்தி
நீராற்றிருவிளக்கிட்டமைநீணாடறியுமன்றே. (௬)

௫-ந் திரு. கோயில் திருக்குறுந்தொகை.

பனைக்கைமும்மதவேழமுரித்தவன்
நினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவன்
அனைத்தும்வேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனோ. (௭)

௬-ந் திரு. திருவாவடுதுறை. திருத்தாண்டகம்.

நம்பனைநால்வேதங்கரைகண்டானை
ஞானப்பெருங்கடலைநன்மைதன்னைக்
கம்பனைக்கல்லாலிருந்தான்றன்னைக்
கற்பகமாயடியார்கட்கருள்செய்வானைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பொன்னைப்பவளத்தைத்திரளுமுத்தைத்
திங்களைஞாயிற்றைத்தீயைநீரை
யம்பொன்னையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௮)

௬-ந் திரு. திருப்பூந்துருத்தி. திருத்தாண்டகம்.

எனக்கென்றுமினியானையெம்மான்றன்னை
யெழிலாருமேகம்பமேயான்றன்னை
மனக்கென்றும்வருவானைவஞ்சர்நெஞ்சி
னில்லானைநின்றியூர்மேயான்றன்னைத்
தனக்கென்றுமடியேனையாளாக்கொண்ட
சங்கரனைச்சங்கைவார்குழையான்றன்னைப்
புனக்கொன்றைத்தாரணிந்தபுனிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திகண்டேனானே. (௯)

௬-ந் திரு. திருவாரூர். திருத்தாண்டகம்.

பற்றிநின்றபாவங்கள்பாற்றவேண்டிற்
பரகதிக்குச்செல்வதொருபரிசுவேண்டிற்
சுற்றிநின்றசூழ்வினைகள்வீழ்க்கவேண்டிற்
சொல்லுகேன்கேள்நெஞ்சேதுஞ்சாவண்ண
முற்றவருமுறுதுணையுநீயேயென்று
முன்னையலாலொருதெய்வமுள்கேனென்றும்
புற்றரவக்கச்சார்த்தபுனிதாவென்றும்
பொழிலாரூராவென்றேபோற்றுநில்லே. (௧௦)

௬-ந் திரு. திருவாரூர். திருத்தாண்டகம்.

புகையெட்டும்போக்கெட்டும்புலன்களெட்டும்
பூதலங்களவையெட்டும்பொழில்களெட்டுங்
கலையெட்டுங்காப்பெட்டுங்காட்சியெட்டுங்
கழற்சேவடியடைந்தார்களைகளெட்டு



நகையெட்டுநாளெட்டுநன்மையெட்டு
நலஞ்சிறந்தார்மனத்தகத்துமலர்களெட்டுந்
திசையெட்டுந்தெரிப்பதற்குமுன்னேபின்னே
திருவாரூர்கோயிலாக்கொண்டநாளே. (௧௧)

சுந்தரமூர்த்திநாயனார்.

௭-ந் திரு. திருவாவடுதுறை. பண்-தக்கேசி.

கங்கைவார்சடையாய்கணநாதா
காலகாலனேகாமனுக்கனலே
பொங்குமாகடல்விடமிடற்றானே
பூதநாதனேபுண்ணியாபுனிதா
செங்கண்மால்விடையாய்தெளிதேனே
தீர்த்தனேதிருவாவடுதுறையு
ளங்கணாவெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே (௧௨)

மண்ணின்மேன்மயங்கிக்கிடப்பேனை
வலியவந்தெனையாண்டுகொண்டானே
கண்ணிலேனுடம்பில்லடுநோயாற்
கருத்தழிந்துனக்கேபொறையானேன்
றெண்ணிலாவெறிக்குஞ்சடையானே
தேவனேதிருவாவடுதுறையு
ளண்ணலேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௩)

ஒப்பிலாமுலையாளொருபாகா
வுத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புரங்களைத்தீவளைத்தங்கே
மூவருக்கருள்செய்யவல்லானே
செப்பவானிழற்கீழிருந்தருளுஞ்
செல்வனேதிருவாவடுதுறையு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளப்பனேயென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௪)

கொதியினால்வருகாளிதன்கோபங்
குறையவாடியகூத்துடையானே
மதியிலேனுடம்பில்லடுநோயான்
மயங்கினேன்மணியேமணவாளா
விதியினாலிமையோர்தொழுதேத்தும்
விகிர்தனேதிருவாவடுதுறையு
ளதிபனேயென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௫)

வந்தவாளரக்கன்வலிதொலைத்து
வாழுநாள்கொடுத்தாய்வழிமுதலே
வெந்தவெண்பொடிபூசவல்லானே
வேடனாய்விசயற்கருள்புரிந்த
விந்துசேகரனேயிமையோர்சீ
ரீசனேதிருவாவடுதுறையு
ளந்தணாவென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௬)

குறைவிலாநிறைவேகுணக்குன்றே
கூத்தனேகுழைக்காதுடையானே
யுறவிலேனுனையன்றிமற்றடியே
னொருபிழைபொறுத்தாலிழிவுண்டோ
சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்
செம்பொனேதிருவாவடுதுறையு
ளறவனேயென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௭)

வெய்யமாகரியீருரியானே
வேங்கையாடையினாய்விதிமுதலே



மெய்யனேயடலாழியன்றரிதான்
வேண்டநீகொடுத்தருள்புரிவிகிர்தா
செய்யமேனியனேதிகழொளியே
செங்கணாதிருவாவடுதுறையு
ளையனேயென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௮)

கோதிலாவமுதேயருள்பெருகு
கோலமேயிமையோர்தொழுகோவே
பாதிமாதொருகூறுடையானே
பசுபதீபரமாபரமேட்டி
தீதிலாமலையேதிருவருள்சேர்
சேவகாதிருவாவடுதுறையு
ளாதியேயென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௯)

வானநாடனேவழித்துணைமருந்தே
மாசிலாமணியேமறைப்பொருளே
யேனமாவெயிறாமையுமென்பு
மீடுதாங்கியமார்புடையானே
தேனெய்பாறயிராட்டுகந்தானே
தேவனேதிருவாவடுதுறையு
ளானேயேயென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௨௦)

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும்
வேரிமத்தமும்விரவிமுன்முடித்த
விண்டைமாமலர்ச்செஞ்சடையானை
யீசனைத்திருவாவடுதுறைபு
ளண்டவாணனைச்சிங்கடியப்ப
னணுக்கவன்றொண்டனூர்வத்தாலுரைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டமிழ்மலர்ப்பத்துப் வல்லார்கள்
சாதலும்பிறப்பும்மறுப்பாரே. (உக)

எ-ந் திரு. திருமறைக்காடு. பண்-காந்தாரம்.

யாழைப்பழித்தன்னமொழிமங்கையொருபங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணிற்
றூழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைநுழைந்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணும்மறைக்காடே. (உஉ)

எ-ந் திரு. கோயில். பண்-குறிஞ்சி.

மடித்தாடுமடிமைக்களன்றியேமனனேநீவாழுநாளுந்
தடுத்தாட்டித்தருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
கடுத்தாடுகரதலத்திற்றமருகமுமெரியகலுங்கரியபாம்பும்
பிடித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. ( )

எ-ந் திரு. கூடலையாற்றூர், பண்-புறநீர்மை.

வடிவுடைமழுவேந்திமதகரியுரிபோர்த்துப்
பொடியணிதிருமேனிப்புரிகுழலுமையோடுங்
கொடியணிநெடுமாடக்கூடலையாற்றூரில்
அடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (உச)

எ-ந் திரு. திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

வார்கொண்டவனமுலையாளுமைபங்கன்கழலே
மறவாதுகல்லெறிந்தசாக்கியற்குமடியேன்
சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புலிக்குமடியேன்
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டற்கடியேன்
கார்கொண்டகொடைக்கழறிற்றறிவார்க்குமடியேன்
கடற்காழிக்கணநாதனடியார்க்குமடியேன்
ஆர்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோனடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (உரு)



மாணிக்கவாசகசுவாமிகள்.

அ-ந் திரு. திருவாசகம். புணர்ச்சிப்பத்து

அல்லிக்கமலத்தயனுமாலுமல்லாதவருமமரர்கோனுஞ்
சொல்லிப்பரவுநாமத்தானைச்சொல்லும்பொருளுமிறந்தசுடரை [ப்
நெல்லிக்கனியைத்தேனைப்பாலைநிறையின்னமுதையமுதின்சுவையை
புல்லிப்புணர்வதென்றுகொலோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே.

அ-ம் திரு. திருக்கோவையார்.

யாழுமெழுதியெழின்முத்தெழுதியிருளின்மென்பூச்
சூழுமெழுதியோர்தொண்டையுந்தீட்டியென்றோல்பிறவி
யேழுமெழுதாவகைசிதைத்தோன்புலியூரிளமாம்
போழுமெழுதிற்றொர்கொம்பருண்டேற்கொண்டுபோதுகவே. (உஎ)

கூ-ந் திரு. திருவிசைப்பா. திருமுகத்தலை. பண்-பஞ்சமம்.

புவனநாயகனேயகவுயிர்க்கமுதே
பூரணாவாரணம்பொழியும்
பவளவாய்மணிபேபணிசெய்வார்க்கிரங்கும்
பசுபதீபன்னகாபரணா
அவனிஞாயிறுபோன்றருள்புரிந்தடியேன்
அகத்திலுமுகத்தலைமூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலுமமர்ந்தாய்
தனியனேன்றனிமைநீங்குதற்கே. (உஅ)

கூ-ந் திரு. திருப்பல்லாண்டு. கோயில். பண்-பஞ்சமம்.

சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணாரிளங்கொங்கையிற்செங்குங்குமம்
போலும்பொடியணிமார்பிலங்குமென்றுபுண்ணியர்போற்றிசைப்ப
மாலுமயனுமறியாநெறிதந்துவந்தென்மனத்தகத்தே
பாலுமமுதமுமொத்துநின்றானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (உகூ)

கO-ந் திரு. திருமந்திரம்.

வழுதலைவித்திடப்பாகல்முளைத்தது
புழுதியைத்தோண்டினேன்பூசினிபூத்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுதுகொண்டோடினர்தோட்டக்குடிகள்
முழுதும்பழுத்ததுவாழைக்கனியே. (௩0)

௧௧-ந் திரு. திருவலஞ்சுழி. மும்மணிக்கோவை.

கழல்வண்ணமுஞ்சடைக்கற்றையுமற்றவர்காணகில்லார்
தழல்வண்ணங்கண்டேதளர்ந்தாரிருவரந்தாமரையின்
நிழல்வண்ணம்பொன்வண்ணநீர்நிலவண்ணநெடியவண்ணம்
அழல்வண்ணமுந்நீர்வலஞ்சுழியாள்கின்றவண்ணலையே. ()

௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

சொல்லுவதறியேன்வாழிதோற்றியதோற்றம்போற்றி
வல்லவந்தருளியென்னைவழித்தொண்டுகொண்டாய்போற்றி
யெல்லையிலின்பவெள்ளமெனக்கருள்செய்தாய்போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ்சேவடிபோற்றியென்ன.

திருச்சிற்றம்பலம்.

## எ-ம் வகுப்பு.

### தேவாரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

ஸ்ரீபுகலியும் திருவீழிமிழலையும். வினவுரை. பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மைம்மருபூங்குழற்கற்றைதுற்றவாணுதன்மான்விழிமங்கையோடும்
பொய்ம்மொழியாமறையோர்களேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே
யெம்பிறைபேயிமைபாதமுக்கணீசனேசவிதென்கொல்சொல்லாய்
மெய்ம்மொழிநான்மறையோர்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. ()

விண்ணிழிகோயில்விரும்பிமேவும்வித்தகமென்கொலிதென்றுசொல்லி
புண்ணியனைப்புகலிந்நிலாவுபூங்கொடியோடிருந்தானைப்போற்றி
நண்ணியகீர்த்திநலங்கொள்கேள்விநான்மறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணியபாடல்வல்லார்களிந்தப்பாரொடுவிண்பரிபாலகரே. (௨)



௨-ந் திரு. திருமருகல். விடந்தீர்த்தபதிகம். பண்-இந்தளம்.

சடையாயெனுமால்சரணீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமான்
மடையார்குவளைமலரும்மருகல்
உடையாய்தகுமோவிவளுண்மெலிவே. (௩)

௩-ந் திரு. திருநாகைக்காரோணம். பண்-செவ்வழி.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றநெடுவெண்ணிலா
வேனற்பூத்தமராங்கோதையோடும்விரவுஞ்சடை
வானநாடனமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௪)

௪-ந் திரு. திருவாலவாய். பண்-கொல்லி.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடேல்
ஆனைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சேர்
ஈனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௫)

௫-ந் திரு. திருவாலவாய். பண்-கௌசிகம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. (௬)

௬-ந் திரு. திருவாலவாய். பண்-புறநீர்மை.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைம்மடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசுநாயனார்.

௪-ந் திரு. திருப்பழனம். பண்-பழந்தக்கராகம்.

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிற்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தான்
அஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே. (௮)

௪-ந் திரு. கோயில். திருநேரிசை.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
எத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னாடல்காண்பானடியனேன்வந்தவாறே. ()

௪-ந் திரு. தனித்திருவிருத்தம்.

விண்ணகத்தான்மிக்கவேதத்துளான்விரிநீருடுத்த
மண்ணகத்தான்றிருமாலகத்தான்மருவற்கினிய
பண்ணகத்தான்பத்தர்சித்தத்துளான்பழநாயடியேன் [னே.
கண்ணகத்தான்மனத்தான்சென்னியானெங்கறைக்கண்ட

௫-ம் திரு. திருநீலக்குடி. திருக்குறுந்தொகை.

செய்யமேனியன்றேனொடுபாறயிர்
நெய்யதாடியனீலக்குடியரன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலாங்
கையிலாமலகக்கனியொக்குமே. (௧௧)

௬-ந் திரு. திருப்பூவணம். திருத்தாண்டகம்.

வடிவேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும்
வளர்சடைமேலிளமதியந்தோன்றுந்தோன்றுங்
கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங்
காதில்வெண்குழைதோடுகலந்துதோன்றும்



இடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்றும்
எழிறிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும்
பொடியேறுதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௨)

ஆணாகிப்பெண்ணாயவடிவுதோன்றும்
அடியவர்கட்காரமுதமாகித்தோன்றும்
ஊணாகியூர்திரிவானாகித்தோன்றும்
ஒற்றைவெண்பிறைதோன்றும்பற்றார்தம்மேற்
சேணாகவரைவில்லாலெரித்ததோன்றுஞ்
செத்தவர்தமெலும்பினாற்செறியச்செய்த
பூணாணுமரைநாணும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௩)

கல்லாலினீழலிற்கலந்துதோன்றுங்
கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று
சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றுஞ்
சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்றும்
அல்லாதகாலனைமுன்னடர்த்ததோன்றும்
ஐவகையானினைவார்பாலமர்ந்துதோன்றும்
பொல்லாதபுலாலெலும்புபூணாய்த்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௪)

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும்
பன்னிரண்டுகண்ணுடையபிள்ளைதோன்றும்
நடைமலிந்தவிடையோடுகொடியுந்தோன்றும்
நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்று
முடைமலிந்தகோவணமுங்கீளுந்தோன்று
முரல்வெண்சிரமாலையுலாவித்தோன்றும்
புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்றும்
மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்றும்
இயல்பாகவிடுபிச்சையேற்றறோன்றும்
இருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றுங்
கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கை
யாயிரமாமுகத்தினொடுவானிற்றோன்றும்
புயல்பாயச்சடைவிரித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (கசு)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட
பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றுஞ்
சீராழித்தாமரையின்மலர்களன்ன
திருந்தியமாநிறத்தசேவடிகடோன்றும்
ஓராழித்தேருடையவிலங்கைவேந்தன்
உடறுணித்தவிடர்ப்பாவங்கெடுப்பித்தன்று
போராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (கஎ)

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையரிந்ததன்மைதோன்றும்
மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தறோன்றுந்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்தறோன்றும்
பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (கஅ)

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்றுந்
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்றுந்
நெற்றிமேற்கண்டோன்றும்பெற்றந்தோன்றுந்



மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்றும்
மலைமகளுஞ்சலமகளும்மலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (ககூ)

அருப்போட்டுமடமுலையாள்பாகந்தோன்று
மணிகிளருமுருவென்னவடர்க்குங்கேழன்
மருப்போட்டுமணிவயிரக்கோவைதோன்று
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டினின்றதோர்திறமுந்தோன்றுஞ்
செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்போட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (உ0)

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தறோன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுதோன்றும்
கோங்கணைந்தகூவிளமுமதமத்தமுங்
குழற்கணிந்தகொள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (உக)

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுதோன்றும்
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (உஉ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்திநாயனார்.

௭-ந் திரு. திருக்கலயநல்லூர். பண்-தக்கராகம்.

குரும்பைமுலைமலர்க்குழலிகொண்டதவங்கண்டு
குறிப்பினொடுஞ்சென்றவடன்குணத்தினைநன்கறிந்து
விரும்பும்வரங்கொடுத்தவளைவேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன்கண்ணுதலோன்மேவியவூர்வினவில்
அரும்பருகேசுரும்பருவவறுபதப்பண்பாட
வணிமயில்கணடமாடமணிபொழில்சூழயலின்
கரும்பருகேகருங்குவளைகண்வளருங்கழனிக்
கமலங்கண்முகமலருங்கலயநல்லூர்காணே. (௨௩)

௭-ந் திரு. திருவாரூர். பண்-காந்தாரம்.

கரையுங்கடலுமலையுங்காலையுமாலையுமெல்லா
முரையில்விரவிவருவானொருவனுருத்திரலோகன்
வரையின்மடமகள்கேள்வன்வானவர்தானவர்க்கெல்லா
மரையனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். ( )

௭-ம் திரு. திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்
பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச்சோழற்கடியேன்
மெய்யடியானரசிங்கமுனையரையற்கடியேன்
விரிதிரைசூழ்கடனாகையதிபத்தற்கடியேன்
கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன்கலியன்
கழற்சத்திவரிஞ்சையர்கோனடியார்க்குமடியேன்
ஐயடிகள்காடவர்கோனடியார்க்குமடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)

மாணிக்கவாசகசுவாமிகள்.

௮-ந் திரு. திருவாசகம். அருட்பத்து.

சோதியேசுடரேசூழொளிவிளக்கேசுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய்பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையினிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. (௨௬)



௮-ந் திரு. திருக்கோவையார்.

புரங்கடந்தானடிகாண்பான்புவிவிண்டுபுக்கறியா
திரங்கிடந்தாவென்றிரப்பத்தன்னீரடிக்கென்னிரண்டு
கரங்கடந்தானொன்றுகாட்டமற்றாங்கதுங்காட்டிடென்று
வரங்கிடந்தான்றில்லையம்பலமுன்றிலம்மாயவனே. (௨௭)

௯-ந் திரு. திருவிசைப்பா. திருப்பூவணம். பண்-பஞ்சமம்.

திருவருள்புரிந்தாளாண்டுகொண்டிங்ஙன்
சிறியனுக்கினியதுகாட்டிப்
பெரிதருள்புரிந்தானந்தமேதருநின்
பெருமையிற்பெரியதொன்றுளதே
மருதரசிருங்கோங்ககின்மரஞ்சாடி
வரைவளங்கவர்ந்திழிவைகைப்
பொருதிரைமருங்கோங்காவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௨௯)

௯-ந் திரு. திருப்பல்லாண்டு. கோயில். பண்-பஞ்சமம்.

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னு
ளாலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. ( )

௧௦-ந் திரு. திருமந்திரம்.

நாசிநுனியினுன்மூவிரலிடை
யீசனிருப்பிடமியாருமறிகிலர்
பேசியிருக்கும்பெருமறையம்மறை
கூசியிருக்குங்குணமதுவாமே. (௩௦)

௧௧-ந் திரு. மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை.

பண்டந்தமாதைத்தாமென்றினியனவேபலவுங்
கொண்டந்தநாள்குறுகாமைக்குறுகுவர்கூருணர்விற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டந்தநீண்முடிக்கார்மதவார்சடைக்கற்றைபொற்றை
வெண்டந்தவேழமுகத்தெம்பிரானடிவேட்டடையவே. (ருக)

கஉ-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

நன்மைபெருகருணெறியேவந்தணைந்துநல்லூரின்
மன்னுதிருத்தொண்டனார்வணங்கிமகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடையநினைப்பதனைமுடிக்கின்றோமென்றவர்தஞ்
சென்னிமிசைப்பாதமலர்சூட்டினான்சிவபெருமான். (ருஉ)

திருச்சிற்றம்பலம்.

## அ-ம் வகுப்பு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

க-ந் திரு. திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்.

வினாவுரை. பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமும்வேதமுமோதுநாவரந்தணர்நாளுமடிபரவ
மங்குன்மதிதவழ்மாடவீதிமருகனிலாவியமைந்தசொல்லாய்
செங்கயலார்புனற்செல்வமல்குசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கங்குல் விளங்கெரியேந்தியாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (க

க-ந் திரு. திருவையாறு. பண்-மேகராகக்குறிஞ்சி.

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைமேலுந்தி
யலமந்தபோதாகவஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில்
வலம்வந்தமடவார்களடமாடமுழவதிரமழையென்றஞ்சிச்
சிலமந்தியலமந்துமரமேறிமுகில்பார்க்குந்திருவையாறே. (உ)

உ-ந் திரு. திருவாரூர். பண்-காந்தாரம்.

பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சட்டவுண்
சிவனதாட்சிந்தையாப்பேதைமார்போலநீவெள்கினாயே [டு
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்ட
னவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.



உ-ந் திரு. கோளறுபதிகம். பண்-பியர்தைக்காந்தாரம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்
மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனான்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளி
சனிபாம்பிரண்டுமுடனே
யாசறுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (ச)

உ-ந் திரு. திருக்கோடிகா. பண்-தட்டராகம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றவிச்சையாற்
பொன்றுகின்றவாக்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே. (ரு)

கூ-ந் திரு. திருச்சண்பை. திருவிசாகம். பண்-சாதாரி.

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர்தீபமொடுதூபமலிவாய்மையதனா
லந்தியமர்சந்திபலவர்ச்சனைகள்செய்யவமர்கின்றவழகன்
சந்தமலிகொந்தளநன்மாதினொடுமேவுபதிசண்பைநகரே. (சு)

கூ-ந் திரு திருக்கழுமலம். திருவியமகம்.

உற்றுமைசேர்வதுமெய்யினையே
யுணர்வதுநின்னருண்மெய்யினையே
கற்றவர்காய்வதுகாமனையே
கனல்விழிகாய்வதுகாமனையே
யற்றமறைப்பதுமுன்பணியே
யமரர்கள்செய்வதுமுன்பணியே
பெற்றுமுகந்ததுகந்தனையே
பிரமபுரத்தையுகந்தனையே. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசுநாயனார்.

௪-ந் திரு திருவையாறு. பண்-காந்தாரம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (அ)

௪-ந் திரு. திருவையாறு. திருநேரிசை.

கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்பொறியரவும்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார்திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார்மான்மறிமழுவும்வைத்தா
ரங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே. (௯)

௪-ந் திரு. திருப்பாதிரிப்புலியூர். திருவிருத்தம்.

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே

௫-ந் திரு. திருக்கடம்பூர். திருக்குறுந்தொகை.

நங்கடம்பனைப்பெற்றவள்பங்கினன்
றென்கடம்பைத்திருக்கரக்கோயிலான்
றன்கடனடியேனையுந்தாங்குத
லென்கடன்பணிசெய்துகிடப்பதே. (௧௧)

௬-ந் திரு. பலவகைத் திருத்தாண்டகம்.

நேர்ந்தொருத்தியொருபாகத்தடங்கக்கண்டு
நிலைதளரவாயிரமாமுகத்தினோடு
பாய்ந்தொருத்திபடர்சடைமேற்பயிலக்கண்டு
படவரவும்பனிமதியும்வைத்தசெல்வர்



தாந்திருத்தித்தம்மனத்தையொருக்காத்தொண்டர்
தனித்தொருதண்டூன்றிமெய்தளராமுன்னம்
பூந்துருத்திபூந்துருத்தியென்பீராகிற்
பொல்லாப்புலாற்றுருத்திபோக்கலாமே. (௧௨)

ஐத்தானத்தகமிடறுசுற்றியாங்கே
யகத்தடைந்தாலியாதொன்றுமிடுவாரில்லை
மைத்தானக்கண்மடவார்தங்களோடு
மாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர்
பைத்தானத்தொண்மதியும்பாம்புநீரும்
படர்சடைமேல்வைத்துகந்தபண்பன்மேய
நெய்த்தானநெய்த்தானமென்பீராகி
னிலாவாப்புலாற்றூனநீக்கலாமே. (௧௩)

பொய்யாறுவாறேபுனைந்துபேசிப்
புலர்ந்தெழுந்தகாலைப்பொருளேதேடிக்
கையாறுக்கரணமுடையோமென்று
களித்தமனத்தராய்க்கருதிவாழ்வீர்
நெய்யாறுவாடியநீலகண்டர்
நிமிர்புன்சடைநெற்றிக்கண்ணர்மேய
வையாறேவையாறேயென்பீராகி
லல்லறீர்ந்தமருலகமாளலாமே. (௧௪)

இழவொன்றுதாமொருவர்க்கிட்டொன்றீயா
ரீன்றெடுத்ததாய்தந்தைபெண்டீர்மக்கள்
கழனங்கோவையாதல்கண்டுந்தேறார்
களித்தமனத்தராய்க்கருதிவாழ்வீர்
அழனம்மைநீக்குவிக்குமரையனுக்கு
மமருலகமாள்விக்குமம்மான்மேய
பழனம்பழனமேயென்பீராகிற்
பயின்றெழுந்தபழவினைநோய்பாற்றலாமே. (௧௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றுத்துறையொன்பதுண்ணின்றோரி
    ரொக்கவடைக்கும்போதுணரமாட்டீர்
மாற்றுத்துறைவழிகொண்டோடாமுன்ன
    மாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர்
வேற்றுத்தொழில்பூண்டார்புரங்கண்மூன்றும்
    வெவ்வழல்வாய்வீழ்விக்கும்வேந்தன்மேய
சோற்றுத்துறைசோற்றுத்துறையென்பீராகிற்
    றுயர்நீங்கித்தூநெறிக்கட்சேரலாமே. (௧௬)

கலஞ்சுழிக்குங்கருங்கடல்சூழ்வையந்தன்னிற்
    கள்ளக்கடலிலழுந்திவாளா
நலஞ்சுழியாவெழுநெஞ்சேயின்பம்வேண்டி
    னம்பன்றனடியிணைக்கேநவில்வாயாகி
லலஞ்சுழிக்குமன்னுகர்தன்னுன்மேய
    வருமறையோடாறங்கமானார்கோயில்
வலஞ்சுழியேவலஞ்சுழியேயென்பீராகில்
    வல்வினைகடீர்ந்துவானாளலாமே. (௧௭)

தண்டிகுண்டோதரன்பிருங்கிருடி
    சார்ந்தபுகழ்நந்திசங்குகன்னன்
பண்டையுலகம்படைத்தான்றானும்
    பாரையளந்தான்பல்லாண்டிசைப்பத்
திண்டிவயிற்றுச்சிறுகட்பூதஞ்
    சிலபாடச்செங்கண்விடையொன்றூர்வான்
கண்டியூர்கண்டியூரென்பீராகிற்
    கடுகநும்வல்வினையைக்கழற்றலாமே. (௧௮)

விடமூக்கப்பாம்பேபோற்சிந்திநெஞ்சே
    வெள்ளேற்றான்றன்றமரைக்கண்டபோது
வடமூக்கமாமுனிவர்போலச்சென்று
    மாதவத்தார்மனத்துளார்மழுவாட்செல்வர்



படமூக்கப்பாம்பணையிற்பள்ளியானும்
    பங்கயத்துமேலயனும்பரவிக்காணக்
குடமூக்கேகுடமூக்கேயென்பீராகிற்
    கொடுவினைகடீர்ந்தரனைக்குறுகலாமே. (௧௯)

தண்காட்டாச்சந்தனமுந்தவளநீறுந்
    தழையணுகுங்குறுங்கொன்றைமாலைசூடிக்
கண்காட்டாக்கருவரைபோலனையகாஞ்சிக்
    கார்மயிலஞ்சாயலார்கலந்துகாண
வெண்காட்டாக்காடங்கிடமாநின்று
    வெரிவீசியிரவாடுமிறைவர்மேய
வெண்காடேவெண்காடேயென்பீராகில்
    வீடாதவல்வினையைவீட்டலாமே. (௨௦)

தந்தையார்தாயாருடன்பிறந்தார்
    தாரமார்புத்திரரார்தாந்தாமாரே
வந்தவாறெங்ஙனேபோமாறேதோ
    மாயமாமிதற்கேதுமகிழவேண்டா
சிந்தையீருமக்கொன்றுசொல்லக்கேண்மின்
    றிகழ்மதியும்வாளரவுந்திளைக்குஞ்சென்னி
யெந்தையார்திருநாமநமச்சிவாய
    வென்றழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே. (௨௧)

சுந்தரமூர்த்திநாயனார்.

௭-ந் திரு. திருநாகைக்காரோணம். பண்-கொல்லிக்கௌவாணம்.

பத்தூர்புக்கிரந்துண்டுபலபதிகம்பாடிப்
    பாவையரைக்கிறிபேசிப்படிறாடித்திரிவீர்
செத்தார்தமெலும்பணிந்துசேவேறித்திரிவீர்
    செல்வத்தைமறைத்துவைத்தீரெனக்கொருநாளிரங்கீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தாரமிலங்கிமிளிர்மணிவயிரக்கோவை
யவைபூணத்தந்தருளிமெய்க்கினிதாநாறுங்
கத்தூரிகமழ்சாந்தும்பணித்தருளவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௨௨)

எ-ந் திரு. திருவாலங்காடு. பண்-பழம்பஞ்சுரம்.

முத்தாமுத்திதரவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர்போற்றும்பரமாபழையனூர்மேய
வத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (௨௩)

எ-ந் திரு. திருவேகம்பம். பண்-தக்கேசி.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானை
ஆதியையமரர்தொழுதேத்துஞ்
சிலந்தான்பெரிதும்உடையானைச்
சிந்திப்பாரவர்சிந்தையுளானை
யேலவார்குழலாளுமைநங்கை
யென்றுமேத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக்கம்பனெம்மானைக்
காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (௨௪)

எ-ந் திரு. திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

கறைக்கண்டன்கழலடியேகாப்புக்கொண்டிருந்த
கணம்புல்லநம்பிக்குங்காரிக்குமடியே
னிறைக்கொண்டசிந்தையானெல்வேலிவென்ற
நின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன்
றறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித்
தொன்மயிலைவாயிலானடியார்க்குமடியே
னறைக்கண்டவேனம்பிமுனையடுவார்க்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணிக்கவாசகசுவாமிகள்.

அ-ந் திரு. திருவாசகம். குழைத்தபத்து.

அன்றேயென்றனாவியுமுடலு
முடைமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்கொண்ட
போதேகொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோ
வெண்டோண்முக்கணெம்மானே
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்
நானோவிதற்குநாயகமே. (௨௬)

அ-ந் திரு. திருக்கோவையார்.

ஈசற்கியான்வைத்தவன்பினகன்றவன்வாங்கியவென்
பாசத்திற்காரென்றவன்றில்லையின்னொளிபோன்றவன்றோள்
பூசத்திருநீறெனவெளுத்தாங்கவன்பூங்கழல்யாம்
பேசத்திருவார்த்தையிற்பெருநீளம்பெருங்கண்களே. (௨௭)

கூ-ந் திரு. திருச்சாட்டியக்குடி. பண்-பஞ்சமம்.

செம்பொனேபவளக்குன்றமேநின்ற
திசைமுகன்மான்முதற்கூட்டத்
தன்பரானவர்கள்பருகுமாரமுதே
யத்தனேபித்தனேனுடைய
சப்புவேபணுவேதாணுவேசிவனே
சங்கராசாட்டியக்குடியார்க்
கின்பனேயெங்குமொழிவறநிறைந்தே
ழிருக்கையிலிருந்தவாறியம்பே. (௨௮)

கூ-ந் திரு. திருப்பல்லாண்டு. கோயில். பண்-பஞ்சமம்.

தாதையைத்தாளறவீசியசண்டிக்குமண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்போனகமுமருளிச்

சோதிமணிமுடித்தாமமுநாமமுந்தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. ()

௧0-ந் திரு. திருமந்திரம்.

பொல்லாப்புலாலைநுகரும்புலையரை
யெல்லாருங்காணவியமன்றன்றூதுவர்
செல்லாகப்பற்றியதீவாய்நரகத்தின்
மல்லாக்கத்தள்ளிமறித்துவைப்பாரே. (௩0)

௧௧-ந் திரு. திருவிடைமருதூர். மும்மணிக்கோவை.

வருந்தேனிறந்துபிறந்துமயங்கும்புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற்புகுகின்றிலேன்புகழ்மாமருதிற்
பெருந்தேன்முகந்துகொண்டுண்டுபிறிதொன்றிலாசையின்றி
யிருந்தேனினிச்சென்றிரவேனொருவரையாதொன்றுமே. ()

௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

அண்ணலேயெனையாண்டுகொண்டருளியவமுதே
விண்ணிலேமறைந்தருள்புரிவேதநாயகனே
கண்ணினுற்றிருக்கயிலையிலிருந்தநின்கோல
நண்ணிநான்றொழநயந்தருள்புரியெனப்பணிந்தார். (௩௨)

திருச்சிற்றம்பலம்.

## கலாசாலை வகுப்பு—௧.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

௧-ந் திரு. திருநள்ளாறும் திருவாலவாயும்.

வினாவுரை பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாடகமெல்லடிப்பாவையோடும்படுபிணக்காடிடம்பற்றிநின்று
நாடகமாடுநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
சூடகமுன்கைமடந்தைமார்கடுவணவரொடுந்தொழுதேத்திவாழ்த்த
வாடகமாடநெருங்குகூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (௧)



௧-ந் திரு. திருப்பாம்புரம். பண்-தக்கராகம்.

சீரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்தசெல்வர்
வாரணிவனமுலைமங்கையொர்பங்கர்மான்மறியேந்தியமைந்தர்
காரணிமணிதிகழ்மிடறுடையண்ணல்கண்ணுதல்விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தருநான்மறையாளர்பாம்புரநன்னகராரே. (௨)

௧-ந் திரு. திருநீலகண்டப்பதிகம். பண்-வியாழக்குறிஞ்சி.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீ
ருய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோஞ்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம். (௩)

௨-ந் திரு. திருநெல்வாயிலரத்துறை. பண்-பியந்தைக்காந்தாரம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௪)

௨-ந் திரு. திருமறைக்காடு. பண்-பியந்தைக்காந்தாரம்.

பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தங்
கங்குலாரிருள்போழுங்கலிமறைக்காடமர்ந்தார்தாந்
திங்கள்சூடினரேனுந்திரிபுரமெரித்தனரேனு
மெங்குமெங்கள்பிரானார்புகழலதிகழ்பழியிலரே. (௫)

௨-ந் திரு. திருப்புகலூர். பண்-பியந்தைக்காந்தாரம்.

பட்டம்பானிறமதியம்படர்சடைச்சுடர்விடுபாணி
நட்டநள்ளிருளாடுநாதனார்நவின்றுறைகோயில்
புட்டன்பேடையொடாடும்பூம்புகலூர்த்தொண்டர்போற்றி
வட்டஞ்சூழ்ந்தடிபரவும்வர்த்தமானீச்சரத்தாரே. (௬)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ந் திரு. திருவலஞ்சுழி. பண்-நட்டராகம்.

என்னபுண்ணியஞ்செய்தனைநெஞ்சமேயிருங்கடல்வையத்து
முன்னைநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கண்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனைவாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே. (எ)

கூ-ந் திரு. திருவேகம்பம். திருவியமகம்.

பாயுமால்விடைமேலொருபாகனேபாவைதன்னுருமேலொருபாகனே
தூயவானவர்வேதத்துவனியேசோதிமாலெரிவேதத்துவனியே
யாயுநன்பொருணுண்பொருளாதியேயாயநீழல்வரும்பொருளாதியே
காயவின்மதன்பட்டதுகம்பமேகண்ணுதற்பரமற்கிடங்கம்பமே. (அ)

திருநாவுக்கரசுநாயனர்.

ச-ந் திரு. திருவாரூர். திருவாதிரைப்பதிகம். பண்-குறிஞ்சி.

முத்துவிதானமணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடுபாவையர்சூழப்பலிப்பின்னே
வித்தகக்கோலவெண்டலைமாலைவிரதிக
ளத்தனாரூராதிரைநாளாலதுவண்ணம். (கூ)

ச-ந் திரு. தனித்திருநேரிசை.

காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே. (௧௦)

ச-ந் திரு. திருக்கழுமலம். திருவிருத்தம்.

பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லா
நாலஞ்சுபுள்ளினமேந்தினவென்பர்நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச்சடைவிரித்தாடுங்கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண்டோவந்தணாழியகலிடமே. (கக)



ரு-ந் திரு. திருக்குறுந்தொகை.

அலங்கல்சேர்சடையாதிபுராணனை
விலங்கல்மெல்லியல்பாகம்விருப்பனை
கலங்கள்சேர்கடனாகைக்காரோணனை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (கஉ)

சு-ந் திரு. தனித்திருத்தாண்டகம்.

அப்பனீயம்மைநீயையனுநீ
யன்புடையமாமனுமாமியுநீ
ஒப்புடையமாதருமொண்பொருளுநீ
யொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ
துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீ
துணையாயென்னெஞ்சந்துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீ
யிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே. (கங)

வெம்பவருகிற்பதன்றுகூற்றநம்மேல்
வெய்யவினைப்பகையும்பையநையும்
எப்பரிவுதீர்ந்தோமிடுக்கணில்லோம்
எங்கெழிலென்ஞாயிறெளியோமல்லோம்
அம்பவளச்செஞ்சடைமேலாறுசூடி
யனலாடியானஞ்சுமாட்டுகந்த
செம்பவளவண்ணர்செங்குன்றவண்ணர்
செவ்வானவண்ணரென்சிந்தையாரே. (கச)

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே
அடங்குவித்தாலாரொருவரடங்காதாரே
ஓட்டுவித்தாலாரொருவரோடாதாரே
உருகுவித்தாலாரொருவருருகாதாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரே
பணிவித்தாலாரொருவர்பணியாதாரே
காட்டுவித்தாலாரொருவர்காணாதாரே
காண்பாரார்கண்ணுதலாய்காட்டாக்காலே. (௧௫)

நற்பதத்தார்நற்பதமேஞானமூர்த்தி
நலஞ்சுடரேநால்வேதத்தப்பானின்ற
சொற்பதத்தார்சொற்பதமுங்கடந்துநின்ற
சொலற்கரியசூழலாயிதுவுன்றன்மை
நிற்பதொத்துநிலையிலாநெஞ்சந்தன்னுள்
நிலாவாதபுலாலுடம்பேபுகுந்துநின்ற
கற்பகமேயானுன்னைவிடுவேனல்லேன்
கனகமாமணிநிறத்தெங்கடவுளானே. (௧௬)

திருக்கோயிலில்லாததிருவிலூரும்
திருவெண்ணீறணியாததிருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்
பாங்கினொடுபலதளிகளில்லாவூரும்
விருப்போடுவெண்சங்கமூதாவூரும்
விதானமும்வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூரும்
அவையெல்லாமூரல்லஅடவிகாடே. (௧௭)

திருநாமமைஞ்செழுத்துஞ்செப்பாராகிற்
தீவண்ணர்திறமொருகாற்பேசாராகில்
ஒருகாலுந்திருக்கோயில்சூழாராகில்
உண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகில்
அருநோய்கள்கெடவெண்ணீறணியாராகில்
அளியற்றார்பிறந்தவாறேதோவென்னிற்
பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே. (௧௮)



நின்னாவார்பிறரன்றிநீயேயானாய்
நினைப்பார்கண்மனத்துக்கோர்வித்துமானாய்
மன்னானாய்மன்னவர்க்கோரமுதமானாய்
மறைநான்குமானாயாறங்கமானாய்
பொன்னானாய்மணியானாய்போகமானாய்
பூமிமேற்புகழ்தக்கபொருளேயுன்னை
யென்னானையென்னானையென்னினல்லால்
ஏழையேனென்சொல்லியேத்துகேனே. (௧௯)

அத்தாவுன்னடியேனையன்பாலார்த்தா
யருணோக்கிற்றீர்த்தநீராட்டிக்கொண்டாய்
எத்தனையுமரியநீயெளியையானா
யெனையாண்டுகொண்டிரங்கியேன்றுகொண்டாய்
பித்தனேன்பேதையேன்பேயேனாயேன்
பிழைத்தனகளத்தனையும்பொறுத்தாயன்றே
இத்தனையுமெம்பரமோவையவையோ
எம்பெருமான்றிருக்கருணையிருந்தவாறே. (௨௰)

குலம்பொல்லேன்குணம்பொல்லேன்குறியும்பொல்லேன்
குற்றமேபெரிதுடையேன்கோலமாய
நலம்பொல்லேனான்பொல்லேன்ஞானியல்லே
னல்லாரோடிசைந்திலேனடுவேநின்ற
விலங்கல்லேன்விலங்கலாதொழிந்தேனல்லேன்
வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லே
னிலம்பொல்லேனிரப்பதலாலீயமாட்டே
னென்செய்வான்றோன்றினேனேழையேனே. (௨௧)

சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து
தரணியொடுவானாளத்தருவரேனு
மங்குவாரவர்செல்வமதிப்போமல்லோ
மாதேவர்க்கேகாந்தரல்லராகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயரா
யாவுரித்துத்தின்றுழலும்புலையரேனுங்
கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகி
லவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே. (௨௨)

சுந்தரமூர்த்திநாயனார்.

௭-ந் திரு. திருநின்றியூர். பண்-தக்கேசி.

திருவும்வண்மையுந்திண்டிறலரசுஞ்
சிலந்தியார்செய்தசெய்பணிகண்டு
மருவுகோச்செங்கணான்றனக்களித்த
வார்த்தைகேட்டுநின்மலரடியடைந்தேன்
பெருகுபொன்னிவந்துந்துபன்மணியைப்
பிள்ளைப்பல்கணம்பண்ணையுணண்ணித்
தெருவுந்தெற்றியுமுற்றமும்பற்றித்
தெருட்டுந்தென்றிருநின்றியூரானே. (௨௩)

௭-ந் திரு. திருநள்ளாறு. பண்-தக்கேசி.

பூவில்வாசகத்தைப்பொன்னினைமணியைப்
புவியைக்காற்றினைப்புனலனல்வெளியைச்
சேவின்மேல்வருஞ்செல்வனைச்சிவனைத்
தேவதேவனைத்தித்திக்குந்தேனைக்
காவியங்கண்ணிபங்கனைக்கங்கைச்
சடையனைக்காமரத்திசைபாட
நாவிலூறுநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௨௪)

௭-ந் திரு. திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான்
காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன்
மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந்தஞ்சை
மன்னவனாஞ்செருத்துணைதன்னடியார்க்குமடியேன்



புடைசூழ்ந்தபுலியதண்மேலரவாடவாடி
பொன்னடிக்கேமனம்வைத்தபுகழ்த்துணைக்குமடியேன்
அடல்சூழ்ந்தவேனம்பிகோட்புலிக்குமடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)

மாணிக்கவாசகசுவாமிகள்.

௮-ந் திரு. திருவாசகம். திருவேசறவு.

நானேயோதவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்
தேனாயின்னமுதமுமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான்
தானேவந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தான்
ஊனாருமுயிர்வாழ்க்கையொறுத்தன்றேவெறுத்திடவே. ()

௮-ம் திரு. திருக்கோவையார்.

ஓராகமிரண்டெழிலாயொளிர்வோன்றில்லையொண்ணுதலங்
கராகம்பயின்றமிழ்தம்பொதிந்தீர்ஞ்சுணங்காடகத்தின்
பராகஞ்சிதர்ந்தபயோதரமிப்பரிசேபணைத்த
விராகங்கண்டால்வள்ளலேயில்லையேயெமரெண்ணுவதே. ()

௯-ந் திரு. திருவிசைப்பா.

தஞ்சை இராசராசேச்சரம். பண்-பஞ்சமம்.

உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பரிதி
யொன்றுநூறாயிரகோடி
யலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோ
வங்ஙனேவழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடம்
பருவரைஞாங்கர்வெண்டிங்க
ளிலைகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௨௮)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௯-ந் திரு. திருப்பல்லாண்டு. கோயில் பண்-பஞ்சமம்.

குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலி
யெங்குங்குழாம்பெருகி
விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மி
மிகுதிருவாரூரின்
மழவிடையாற்குவழிவழியாளாய்
மணஞ்செய்குடிப்பிறந்த
பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. (உ௯)

௧௦-ந் திரு. திருமந்திரம்.

சரிதாதிநான்குந்தருஞானநான்கும்
விரிவானவேதாந்தசித்தாந்தமாறும்
பொருளானநந்திபொன்னகர்போந்து
மருளாகுமாந்தர்வணங்கவைத்தானே. (௩௦)

௧௧-ந் திரு. சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை.

இயலிசைநாடகமாயெழுவேலைகளாய்வழுவாப்
புயலில்விண்ணொடுமண்முழுதாய்ப்பொழுதாகிநின்ற
மயிலியன்மாமறைக்காடர்வெண்காடர்வண்டில்லைமல்கு
கயலியல்கண்ணிபங்காரன்பர்சித்தத்தடங்குவரே. (௩௧)

௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

வாசத்திருமஞ்சனம்பள்ளித்தாமஞ்சாந்தமணிதூபந்
தேசிற்பெருகுஞ்செழுந்தீபமுதலாயினவுந்திருவமுது
மீசற்கேற்றபரிசினாலருச்சித்தருளவெந்நாளும்
பூசைக்கமர்ந்தபெருங்கூத்தர்பொற்பார்சிலம்பினொலியளித்
[தார். (௩௨)

திருச்சிற்றம்பலம்.



## கலாசாலை வகுப்பு—உ.

### தேவாரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

௧-ந் திரு. திருக்கழுமலம், திருத்தாளச்சதி. பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வந்தெப்பால்பயின்றுநின்றவும்பரப்
பாலேசேர்வாயேனோர்காண்பயில்கணமுனிவர்களுஞ்
சிந்தித்தேவந்திப்பச்சிலம்பின்மங்கைதன்னொடுஞ்
சேர்வார்நாணீள்கயிலைத்திகழ்தருபரிசதெலாஞ்
சந்தித்தேயிந்தப்பார்சனங்கணின்றுதங்கணாற்
றுமேகாணாவாழ்வாரத்தகவுசெய்தவனதிடங்
கந்தத்தாலெண்டிக்குங்கமழ்ந்திலங்குசந்தனக்
காடார்பூவார்சீர்மேவுங்கழுமலவளநகரே. (௧)

௧-ந் திரு. திருத்தருமபுரம். பண்-யாழ்முரி.

மாதர்மடப்பிடியு-மட-வன்னமுமன்னதோர்
நடையுடைம்மலைமக-டுணையெனமகிழ்வர்
பூதவினப்படைநின்-றிசை-பாடவுமாடுவ
ரவர்படர்சடைந்நெடு-முடியதோர்புனலர்
வேதமொடேழிசைபா-டுவ-ராழ்கடல்வெண்டிரை
யிரைந்நுரைகரைபொரு-துவிம்மிநின்றயலே
தாதவிழ்புன்னைதயங்-குமலர்ச்சிறைவண்டறை
யெழில்பொழில்குயில்பயில்-தருமபுரம்பதியே. (உ)

௧-ந் திரு. திருவீழிமிழலை. திருவிராகம். பண்-நட்டபாடை.

சினமலிகரியுரிசெய்தசிவனுறைதருதிருமிழலையைமிகு
தனமனர்சிரபுரநகரிறைதமிழ்விரகனதுரையொருபதும்
மனமகிழ்வொடுபயில்பவரெழின்மலர்மகள்கலைமகள்சயமக
ளினமலிபுகழ்மகளிசைதரவிருநிலனிடையினிதமர்வரே. ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨-ந் திரு. திருக்கேதாரம். பண்-செவ்வழி.

தொண்டரஞ்சுங்களிறும்மடக்கிச்சுரும்பார்மலர்
இண்டைகட்டிவழிபாடுசெய்யும்மிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவ்வரிக்
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே. (௪)

௩-ந் திரு. திருப்பனந்தாள். பண்-பஞ்சமம்.

கண்பொலிநெற்றியினான்றிகழ்கையிலோர்வெண்மழுவான்
பெண்புணர்கூறுடையான்மிகுபீடுடைமால்விடையான்
விண்பொலிமாமதிசேர்தருசெஞ்சடைவேதியனூர்
தண்பொழில்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௫)

௩-ந் திரு. திருநெல்வேலி. பண்-சாதாரி.

மருந்தவைமந்திரமறுமைநன்னெறியவைமற்றுமெல்லா
மருந்துயர்கெடுமவர்நாமமேசிந்தைசெய்நன்னெஞ்சமே
பொருந்துதண்புறவினிற்கொன்றைபொன்சொரிதரத்துன்
றுபைம்பூஞ், செருந்திசெம்பொன்மலர்திருநெல்வேலியுறை
செல்வர்தாமே. (௬)

௩-ந் திரு. திருவாலவாய். திருவியமகம்.

ஆலநீழலுகந்ததிருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்
கனே, கோலநீறணிமேதகுபூதனே கோதிலார்மனமேவிய
பூதனே, யாலநஞ்சமுதுண்டகளத்தனே யாலவாயுறையண்
டர்களத்தனே. (௭)

௩-ந் திரு திருக்கோணமாமலை. பண்-புறநீர்மை.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புமலர்நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியணி



விடையர், கரைகெழுசந்துங் காரகிற்பிளவு மளப்பருங்கன
மணிவரன்றிக், குரைகடலோதநித்திலங்கொழிக்குங்கோண
மாமலையமர்ந்தாரே. (௮)

திருநாவுக்கரசுநாயனார்.

௪-ந் திரு. திருவாரூர்ப்பழமொழி. பண்-காந்தாரம்.

மெய்யெலாம்வெண்ணீறு சண்ணித்தமேனியான் றாடொழா
தே, யுய்யலாமென் றெண்ணியுறிதூக்கியுழிதந்தெனுள்ளம்
விட்டுக், கொய்யுலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுமாரூ
ரைக், கையினாற்றொழாதொழிந்துகனியிருக்கக்காய்கவர்ந்த
கள்வனேனே. (௯)

௪-ந் திரு. திருக்குறுக்கை. திருநேரிசை.

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாவரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௧௦)

௪-ந் திரு. கோயில். திருவிருத்தம்.

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான்
கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்ப
தென்னே. (௧௧)

௫-ந் திரு. திருச்சிராப்பள்ளி. திருக்குறுந்தொகை.

தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனாரெனநம்வினைநாசமே. (௧௨)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௬ ம் திரு. திருப்புகலூர். திருத்தாண்டகம்.

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோ
 வெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லாற்
கண்ணிலேன்மற்றோர்களைகணில்லேன்
 கழலடியேகைதொழுதுகாணினல்லா
லொண்ணுளேயொன்பதுவாசல்வைத்தா
 யொக்கவடைக்கும்போதுணரமாட்டேன்
புண்ணியாவுன்னடிக்கேபோதுகின்றேன்
 பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௩)

அங்கமேபூண்டாயனலாடினா
 யாதிரையாயானிழலாயானேறூர்ந்தாய்
பங்கமொன்றில்லாதபடர்சடையினாய்
 பாம்பொடுதிங்கள்பகைதீர்த்தாண்டாய்
சங்கையொன்றின்றியேதேவர்வேண்டச்
 சமுத்திரத்துநஞ்சுண்டுசாவாமூவாச்
சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன்
 திருப்புகலூர்மேவியதேவதேவே. (௧௪)

பையரவக்கச்சையாய்பால்வெண்ணீற்றாய்
 பளிக்குக்குழையினாய்பண்ணாரின்சொன்
மைவிரவுகண்ணாளைப்பாகங்கொண்டாய்
 மான்மறிகையேந்தினாய்வஞ்சக்கள்வ
ரைவரையுமென்மேற்றரவறுத்தா
 யவர்வேண்டுங்காரியமிங்காவதில்லைப்
பொய்யுரைபாதுன்னடிக்கேபோதுகின்றேன்
 பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௫)

தெருளாதார்மூவெயிலுந்தீயில்வேவச்
 சிலைவளைத்துச்செங்கணையாற்செற்றதேவே
மருளாதார்தம்மனத்தில்வாட்டந்தீர்ப்பாய்
 மருந்தாய்ப்பிணிதீர்ப்பாய்வானோர்க்கென்றும்



அருளாகியாதியாய்வேதமாகி
 யலர்மேலானீர்மேலானுய்ந்துங்காணப்
பொருளாவாயுன்னடிக்கேபோதுகின்றேன்
 பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௬)

நீரேறுசெஞ்சடைமேனிலாவெண்டிங்க
 ணீங்காமல்வைத்துகந்தநீதியானே
பாரேறுபடுதலையிற்பலிகொள்வானே
 பண்டனங்கற்காய்ந்தானேபாவநாசா
காரேறுமுகிலனையகண்டத்தானே
 கருங்கைக்களிற்றுரிவைக்கதறப்போர்த்த
போரேறேயுன்னடிக்கேபோதுகின்றேன்
 பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௭)

விரிசடையாய்வேதியனேவேதகீதா
 விரிபொழில்சூழ்வெண்காட்டாய்மீயச்சூராய்
திரிபுரங்களெரிசெய்ததேவதேவே
 திருவாரூர்த்திருமூலட்டானமேயாய்
மருவினியார்மனத்துளாய்மாகாளத்தாய்
 வலஞ்சுழியாய்மாமறைக்காட்டெந்தாயென்றும்
புரிசடையாயுன்னடிக்கேபோதுகின்றேன்
 பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௮)

தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந்
 திருவடிமேலலரிட்டுத்தேடிநின்று
நாவார்ந்தமறைபாடிநட்டமாடி
 நான்முகனுமிந்திரனுமாலும்போற்றக்
காவார்ந்தபொழிற்சோலைக்கானப்பேராய்
 கழுக்குன்றத்துச்சியாய்கடவுளேநின்
பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன்
 பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்யாடிநின்மலனே நீலகண்டா
நிறைவுடையாய்மறைவல்லாய்நீதியானே
மையாடுகண்மடவாள்பாகத்தானே
மான்றோலுடையாய்மகிழ்ந்துநின்றாய்
கொய்யாடுகூவிளங்கொன்றைமாலை
கொண்டடியேனுனிட்டுக்கூறிநின்று
பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௨0)

துன்னஞ்சேர்கோவணத்தாய்தூயநீற்றாய்
துதைந்திலங்குவெண்மழுவாள்கையிலேந்தித்
தன்னனையுந்தண்மதியும்பாம்புநீருஞ்
சடைமுடிமேல்வைத்துகந்ததன்மையானே
யன்னநடைமடவாள்பாகத்தானே
யக்காரம்பூண்டானேயாதியானே
பொன்னங்கழலடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௨௧)

ஒருவரையுமல்லாதுணராதுள்ள
முணர்ச்சித்தடுமாற்றத்துள்ளேநின்ற
விருவரையுமூவரையுமென்மேலேவி
யில்லாததரவறுத்தாய்க்கில்லேனலக்
கருவரைசூழ்கானவிலங்கைவேந்தன்
கடுந்தேர்மீதோடாமைக்காலாற்செற்ற
பொருவரையாயுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௨௨)

சுந்தரமூர்த்திநாயனார்.

எ-ந் திரு. திருவாரூர். பண்-செந்துருத்தி.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி



யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதிரே. (௨௩)

எ-ந்திரு. திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கௌவாணம்.

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்
பரமனையேபாடுவாரடியார்க்குமடியேன்
சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன்
திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன்
முப்போதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன்
முழுநீறுபூசியமுனிவர்க்குமடியே
னப்பாலுமடிச்சார்ந்தவடியார்க்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௪)

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல்
வரிவளையாண்மானிக்குநேசனுக்குமடியேன்
றென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன்
றிருநீலகண்டத்துப்பாணனார்க்கடியேன்
னென்னவனாமரனடியேயடைந்திட்டசடைய
னிசைஞானிகாதலன்றிருநாவலூர்க்கோ
னன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பா
ராரூரிலம்மானுக்கன்பராவாரே. (௨௫)

மாணிக்கவாசகசுவாமிகள்.

அ-ந் திரு. திருவாசகம். அச்சோப்பதிகம்

முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணம்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௨௬)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௮-ந் திரு. திருக்கோவையார்.

காரணிகற்பகங்கற்றவர்நற்றுணைபாணரொக்கல்
சீரணிசிந்தாமணியணிதில்லைச்சிவனடிக்குத்
தாரணிகொன்றையன்றக்கோர்தஞ்சங்கநிதிவிதிசே
ரூருணியுற்றவர்க்கூரன்மற்றியாவர்க்குமூதியமே. (௨௭)

௯-ந் திரு. திருவிசைப்பா. திருவாரூர். பண்-பஞ்சமம்.

பத்தியாயுணர்வோரருளைவாய்மடுத்துப்
பருகுதோறமுதமொத்தவர்க்கே
தித்தியாவிருக்குந்தேவர்காளிவர்தந்
திருவுருவிருந்தவாபாரீர்
சத்தியாச்சிவமாயுலகெலாம்படைத்த
தனிமுழுமுதலுமாயதற்கோர்
வித்துமாயாரூராதியாய்வீதி
விடங்கராய்நடங்குலாவினரே. (௨௮)

௯-ந் திரு. திருப்பல்லாண்டு. கோயில். பண்-பஞ்சமம்.

ஆரார்வந்தாரமரர்குழாத்திலணியுடையாதிரைநாள்
நாராயணனொடுநான்முகனங்கியிரவியுமிந்திரனுந்
தேரார்வீதியிற்றேவர்குழாங்கடிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ்பாடியுமாடியும்பல்லாண்டுகூறுதுமே. ()

௧௦-ந் திரு. திருமந்திரம்.

மாலைவிளக்குமதியமுஞ்ஞாயிறும்
சாலவிளக்குந்தனிச்சுடரண்ணலுண்
ஞானம்விளக்கியநாதனென்னுள்புகுந்
தூனைவிளக்கியுடனிருந்தானே. (௩௦)



௧௧-ந் திரு. சிவபெருமான். திருவிரட்டைமணிமாலை.

அங்கைமறித்தவராலவியுண்ணுமவ்வானவர்கள்
தங்கைமறித்தறியார்தொழுதேநிற்பர்தாழ்சடையின்
கங்கைமறித்தணவப்பணமாசுணக்கங்கணத்தின்
செங்கைமறித்திரவிற்சிவனாடுந்திருநட்டமே. (௩௧)

௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

மறவாமையானமைத்தமனக்கோயிலுள்ளிருத்தி
யுறவாதிதனையுணருமொளிவிளக்குச்சுடரேற்றி
யிறவாதவானந்தமெனுந்திருமஞ்சனமாட்டி
யறவாணர்க்கன்பெனுமமுதமைத்தர்ச்சனைசெய்வார். ()

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்.

ஏறுமயிலேறிவிளையாடுமுக மொன்றே
ஈசனுடன்ஞானமொழிபேசுமுக மொன்றே
கூறுமடியார்கள்வினைதீர்க்குமுக மொன்றே
குன்றுருவவேல்வாங்கிநின்றமுக மொன்றே
மாறுபடுசூரனைவதைத்தமுக மொன்றே
வள்ளியைமணம்புணரவந்தமுக மொன்றே
ஆறுமுகமானபொருணீயருளல் வேண்டும்
ஆதியருணாசலமமர்ந்த பெருமாளே. (௧)

இசைந்தஏறுங்கரியுரிபோர்வையு மெழில்நீறும்
இலங்குநூலும்புலியதளாடையு மழுமானும்
அசைந்ததோடுந்திண்களுமாலையு முடிமீதே
யணிந்தஈசன்பரிவுடனருளிய குருநாதா
உசந்தசூரன்கிளையுடன்வேரற முனிவோனே
உகந்தபாசக்கயிற்றொடுதூதர்கள் கலியாதே
யசந்தபோதென்றுயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்தவேலும்புயமிசைமேவிய பெருமாளே. (௨)

இருந்தவீடுங்கொஞ்சியசிறுவரு முறுகேளும்
இசைந்தவூரும்பெண்டிருமிளமையும் வளமேவும்
விரிந்தகாடுங்குன்றமுநிலையென மகிழாதே
விளங்குதீபங்கொண்டுனையடிதொழ வருவாயே
குருந்திலேறுங்கொண்டலின்வடிவினன் மருகோனே
குறங்குலாவுங்குன்றுறைகுறமகள் மணவாளா
தெரிந்தவேதஞ்செந்தமிழ்தெரிதரு புலவோனே
சிவந்தகாலுந்தண்டையுமழகிய பெருமாளே. (௩)



சுவாமிமலை.

பாதிமதிநதிபோதுமணிசடை
நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழிமாதுகுறமகள்
பாதம்வருடிய மணவாளா
காதுமொருவிழிகாகமுறவருள்
மாயனரிதிரு மருகோனே
காலனெனையணுகாமலுனதிரு
காலில்வழிபட அருள்வாயே
ஆதியயனொடுதேவர்சுரருல
காளும்வகைதரு சிறைமீளா
ஆடுமயிலினிலேறியமரர்கள்
சூழவரவரு மிளையோனே
சூதமிகவளர்சோலைமருவுசு
வாமிமலைதனி லுறைவோனே
சூரனுடலறவாரிசுவறிட
வேலைவிடவல பெருமாளே. (௪)

திருவேரகம்.

சரணகமலாலயத்தையரைநிமிஷநேரமட்டில்
தவமுறைதியானம்வைக்க அறியாத
சடகசடமூடமட்டிபவவினையிலேசனித்த
தமியன்மிடியால்மயக்க முறுவேனோ
கருணைபுரியாதிருப்பதெனகுறையிவேளைசெப்பு
கயிலைமலைநாதர்பெற்ற குமரோனே
கடகபுயமீதிரத்நமணியணிபொன்மாலைசெச்சை
கமழுமணமார்கடப்ப மணிவோனே
தருணமிதையாமிகுத்தகனமதுறுநீள்சவுக்ய
சகலசெல்வயோகமிக்க பெருவாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைமைசிவஞானமுத்திபரகதியுநீகொடுத்து
    தவிபுரியவேணுமெய்த்த வடிவேலா
அருணதளபாதபத்மமதுநிதமுமேதுதிக்க
    அரியதமிழ்தானளித்த மயில்வீரா
வதிசயமநேகமுற்றபழநிமலைமீதுதித்த
    அழகதிருவேரகத்தின் முருகோனே. (௫)

மலடிவயிற்று மகன்போலேயொரு
    புதையலெடுத்த தனம்போலேயொளிர்
    வயிரம்பிடித்த களம்போலேயிள முலைமாதர்
வலியவணைத்த சுகம்போலேமதி
    ரொளிவிடுரத்ந வளம்போலேபரி
    மளமிகுபுட்ப வனம்போலேசுர நதிபோலே
அலைகடல்பெற்றிடு பெண்போலேவரு
    புலவர்தமக்கிரு கண்போலேகரை
    யருகிலடுத்த சலம்போலேயுள தழகாமோர்
அமுதுபுசித்தரசம்போலேதிரை
    கடன்மடைவிட்ட சலம்போலேதின
    மதிசயமுத்தமி ழன்பாலோதகி னருடாராய்
கலகலெனச்சொல் சிலம்பார்பெறு
    மலைமகள்பெற்ற குழக்தாய்மாமத
    கரிமுகனுக்கொரு தம்பீகானவர் மகளாமோர்
கடிமலர்மொய்த்த சுரும்பேஞானிகண்
    மனதுருசித்த கரும்பேவானவர்
    கவலைதணித்தரு ளன்பேமாயவன் மருகோனே
குலிசிமகட்கொரு நம்பாவேழிசை
    யளிகள்சுவைத்த கடம்பாவாழ்தரு
    குரைகடலுக்கொரு சம்பானுய்வரு வடிவேலா
கொடியபிணிக்கு மருந்தேதாள்பணி
    யமரர்தமக்கு விருந்தேதோகைகொள்
    குருகுகடத்து துரங்காவேரக முருகோனே. (௬)



திருப்பழனிமலை.

கருவினுருவாகிவந்துவயதளவிலேவளர்ந்து
    கலைகள்பலவேதெரிந்து மதனாலே
கரியகுழன்மாதர்தங்களடிசுவடுமார்புதைந்து
    கவலைபெரிதாகிநொந்து மிகவாடி
அரகரசிவாயவென்றுதினமுநினையாமனின்று
    அறுசமயநீதியொன்று மறியாம
லசனமிடுவார்கடங்கள்மனைகடலைவாசனின்று
    அநுதினமுநாணமின்றி யழிவேனோ
உரகபடமேல்வளர்ந்தபெரியபெருமாளரங்க
    ருலகளவுமான்மகிழ்ந்த மருகோனே
உபயகுலதீபதுங்கவிருதுகவிராஜசிங்க
    முறைபுகலியூரிலன்று வருவோனே
பரவைமனைமீதிலன்றுஒருபொழுதுதூதுசென்ற
    பரமனருளால்வளர்ந்த குமரேசா
பகையசுரர்சேனைகொன்றுஅமரர்சிறைமீளவென்று
    பழனிமலைமீதில்நின்ற பெருமாளே. (௭)

விநாயகமலை.

சரவணசாதாநமோநம கருணையதீதாநமோநம
    சததளபாதாநமோநம அபிராம
தருணகநீராநமோநம நிருபமல்வீராநமோநம
    சமதளவூராநமோநம சகதீச
பரமசொரூபாநமோநம சுரர்பதிபூபாநமோநம
    பரிமளநீபாநமோநம உமைகாளி
பகவதிபாலாநமோநம இகபரமூலாநமோநம
    பவுருஷசீலாநமோநம அருள்தாராய்
இரவியுமாகாசபூமியும் விரவியதூளேறவானவ
    ரெவர்களுமீடேறவேழ்கடல் முறையோவென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிடர்படமாமேருபூதர மிடிபடவேதானிசாசர
　　நிகல்கெடமாவேகநீடயில்　　விடுவோனே
மரகதவாகாரவாயனு மிரணியவாகாரவேதனும்
　　வசுவெனுமாகாரவீசனு　　மடிபேண
மயிலுறைவாழ்வேவிநாயக மலையுறைவேலாமகிந்த
　　வனசரராதாரமாகிய　　பெருமாளே. (அ)

கதிர்காமம்.

திருமக ளுலாவு மிருபுய முராரி
　　திருமருக நாமப்　　பெருமாள்காண்
ஜெகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
　　தெரிதரு குமாரப்　　பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்வினை யாடு
　　மரகதம யூரப்　　பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
　　மருவுகதிர் காமப்　　பெருமாள்காண்
அருவரைகள் நீறு பட அசுரர்மாள
　　அமர் பொருத வீரப்　　பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
　　அமலர்குரு நாதப்　　பெருமாள்காண்
இருவினையி லாத திருவினைவி டாத
　　இமையவர்கு லேசப்　　பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
　　இருதனவி நோதப்　　பெருமாளே. (கூ)

இறவாமற்பிறவாமல் எனையாள்சற்　　குருவாகிப்
பிறவாகித்திரமான பெருவாழ்வைத்　　தருவாயே
குறமாதைப்புணர்வோனே குகனேசொற்　　குமரேசா
கறையானைக்கிளையோனே கதிர்காமப் பெருமாளே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

---

35710

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்.

இப்புத்தகத்தைப் பெற விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்தாரிடம் பெற்றுக்கொள்ளலாம். ஒரே முறையிற் தொகையாக வாங்குபவர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப்படும்.

எம். எஸ். துரை.
புத்தகசாலை அதிபர்,
சொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org